Book 11

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

# நாம் ஏன் படைக்கப்பட்டோம்?

## ஓர் இறைவன்

சிறப்பிதழ்

ஜுலை
2000
July

PUTHIYA NINAIVOOTAL

TAMIL MONTHLY

# எளிய உண்மைகள்

**இறுதி இறைவேதமான அல்குர்ஆன் உலகின் வேறு எந்தப் புத்தகத்திலும் காணப்படாத, தனித்தன்மையான, அற்புதமான அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள ஒவ்வொரு விஷயமும் 19 என்ற எண்ணின் அடிப்படையில் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. இது, இறைவன் குர்ஆனில் 74:23-31வசனங்களில் கூறுவது போல இக்கட்டமைப்பு குர்ஆன் மனிதர்களின் சொல் அல்ல என்று நிரூபிப்பதாகவும், நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதாகவும், நயவஞ்சகர்களை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளதை அறிவுடையோர்கள் கண்கூடாகக் கண்டு கொள்ளலாம்.. 74:35ல் இறைவன் கூறுவதைப் போல் இது ஒரு மிகப்பெரியஅற்புதமாகவும் அமைந்திருப்பதை அறிந்து அதிசயிக்கலாம், மேலும் இக்கட்டமைப்பு அல்குர்ஆனின் ஒவ்வொரு எண்ணையும் எழுத்தையும் பாதுகாக்கும் வேலையை தொடர்ந்து செய்யக் கூடியதாகவும் உள்ளதை அறிந்து வியக்கலாம் .**

1. குர் ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில்
   இடம் பெறும் அரபி எழுத்துக்கள் .......................................................................... 19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = ........................................................ 19x6
3. குர் ஆனின் மொத்த வசனங்களின் எண்ணிக்கை 6346 ........................................ 19x334
   (அதில் எண்ணிடப்பட்டது 6234, எண்ணிடப்படாதது 112 (பிஸ் மிக்கள்)
   6234 + 112 = 6346 கவனிக்க 6+3+4+ 6 = ............................................................19
4. 'பிஸ்மில்லாஹ்' குர் ஆனில் 114 முறை உள்ளது 114 ............................................19X6
   ( சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது
   சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30 ஆக 27+30 = 57.......................... 19x3
5. பிஸ்மில்லாஹ் இல்லாத சூரா 9ற்கும் பிஸ்மில்லாஹ் இருமுறை
   இடம் பெறும் சூரா 27க்கும் இடையில் இடம் பெறும் சூராக்கள்............................19
6. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும்
   சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11.... 27) வரும் கூட்டுத்தொகை 342 = .....19x18
7. இதில் முக்கிய விஷயம் என்ன வென்றால் இருமுறை பிஸ்மி
   இடம் பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம்
   பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 = .........................19x18
8. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும்
   வார்த்தைகள் சரியாக ............................................................................................ 19
9. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும்
   எழுத்துக்கள் சரியாக 76 ...................................................................................... 19x4
10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம் பெறும் வசனங்கள் ...........19
11. இந்த சூரா, இடது புறத்திலிருந்து புரட்டினால் வருவது ..............................19வது இடத்தில்
12. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304 ............................................. 19x16
13. இறுதி வஹீயான சூரா 110ல் இடம் பெறும் வார்த்தைகளும் சரியாக .................... 19
14. கடைசி வெளிப்பாட்டின் (சூரா 110:1) முதல் வசனத்தில் இருப்பது ............ 19 எழுத்துக்கள்
15. 29 சூராக்களின் ஆரம்பங்களில் வரும் 14 எழுத்துக்கள் கொண்டு அமைக்கப்பட்ட
    14 வகையான முத்திரை எழுத்துக்கள் (உம்) அலிப், லாம், மீம்) இவற்றைக்
    கூட்ட 29+14+14 = 57 = .............................................................................. 19x3
16. முத்திரை எழுத்துக்கள் அமைந்த 29 சூராக்களின் சூரா எண்களைக் கூட்ட
    (2+3+7+ ...... + 50+ 68) = 822 அத்துடன் 14 ஐக் கூட்ட (அதாவது 14 வகைகள்)
    = 822+14 = 836 = ..............................................................................................19x44
17. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை
    எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில்
    முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன ................................................ 19x2
18. முதல் முத்திரை சூராவிலிருந்து கடைசி முத்திரை சூரா வரை முத்திரையிட்டதும்
    முத்திரையிடாதது மாக மாறி மாறி வருவது .............................................. 19 விதமாக
19. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3,
    4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70,
    80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000,
    50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 ......................... 19x8534

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

செய்தி 1

ஜுலை2000
நினைவு 6

குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஸைன்

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்

## இதழின் உள்ளே

★ மானிட சமுதாயத்தின் நீண்ட நாளைய கேள்விக்கு விடை!
★ நாம் ஏன் படைக்கப்பட்டோம்?
★ (33 : 6க்கு)அர்த்தம், அனர்த்தம்
★ படைப்பின் துவக்கத்திற்கு முன் (Before Genesis)
★ அதிகாரபூர்வமான ஆதாரம்
★ பரிபூரண மகிழ்ச்சி
★ முடிவெடுக்கும் வயது 40
★ விதி
★ பலதார மணம் கண்டிக்கதக்கது
★ தொழுகையின் கண்கூடான பலன்கள்

# மானிட சமூகத்தின் ?!?!?!?

# நீண்ட நாளைய கேள்விக்கு விடை!

இறுதி வேதமான அல்குர் ஆனின் முன்னறிவிப்பின் படி (3:81) வேதங்கள் அனைத்தும் அருளப்பட்ட பின்னர் அவற்றை ஒருங்கிணைத்து, மெய்ப்பிக்கும் தூதர் வந்து சென்று விட்டார். அவர் தூதர்தான் என்பதற்கு இவ்வுலகிற்குச் சமர்ப்பித்த ஆதாரங்கள் ஏராளம். மனித சிந்தனைக்குத் தோன்றாத, மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஓர் அற்புதக் கணிதக் கட்டமைப்பை, குர்ஆனில், இறைவனால் சுமார் 1400 வருடங்களாக மறைக்கப்பட்டிருந்த ஓர் இரகசியக் குறியீட்டை, இறைவனின் அனுமதியுடன் அவர் வெளிப்படுத்தினார்.

அம்மாபெரும் அற்புதம் அவருடைய தூதுவத்துவத்திற்குரிய ஆதாரமாகவும், குர் ஆனைச் சந்தேகத்திற்கிடமின்றி அனைவரும் ஏற்றுக்கொள்ளும் விதமாக மெய்பிப்பதாகவும், குர்ஆனில் உள்ள ஒவ்வொரு எண்ணையும் எழுத்தையும் பாதுகாப்பதாகவும் உள்ளது. இன்னும் இறைவன் 74:31ல் கூறுவது போல் நிராகரிக்கும், நம்பமறுப்பவர்களையும், நயவஞ்சகர்களையும் தொந்தரவு செய்வதாகவும், சோதனையாகவும், உள்ளது. நம்பிக்கை கொண்டோருக்கோ நம்பிக்கையை அதிகப்படுத்துவதாகவும், உறுதிப்பாட்டை அளிப்பதாகவும் உள்ளது.

மேலும் குர் ஆனின் வசனங்கள் 72:25-28ல் இறைவன் முஹம்மத் நபியை அறிவிக்குமாறு கூறுகிறார்.

***72:25 கூறும் உங்களுக்கு வாக்களிக்கப் பட்டிருப்பது சமீபத்தில் நிகழுமா அல்லது என் இரட்சகர் அதை சிறிது தாமதிப்பாரா என்பதை நான் அறிய மாட்டேன்.***

72:26 அவரே எதிர்காலத்தை அறிந்தவர்; அவர் எதிர்காலத்தை எவர் ஒருவருக்கும் வெளிப் படுத்துவதில்லை.

72:27 அவர் தேர்ந்தெடுத்த ஒரு தூதருக்கு மட்டும் அவர் கடந்த காலத்திலும் எதிர்காலத்திலும் இருந்து, குறிப்பான செய்திகளை வெளிப்படுத்துவார்.

72:28 இது, அவர்கள் தங்கள் இரட்சகரின் செய்திகளைச் சேர்ப்பித்து விட்டார்கள் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக. அவர்களிடம் இருப்பதை அவர் முழுமையாக அறிந்திருக்கிறார். அவர் எல்லாவற்றின் எண்ணிக்கையையும் எண்ணி வைத்திருக்கிறார்.

முஹம்மத் நபியின் மூலம் இறைவன் அறிவிப்பதன் படி அவருக்குப் பின்னர் வந்த **மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத் கலீஃபா** நம்பிக்கையாளர்களுக்கு மறுமை நாளைப் பற்றி அறிவிக்கிறார். மேலும் கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளையும் குறிப்பான செய்திகளையும் அறிவிக்கிறார். புதிய நினைவூட்டலின் ஆரம்ப இதழ் முதற்கொண்டு மெய்ப்பிக்கும் தூதரின் செய்திகள், மற்றும் அவருடைய ஆதாரங்கள் வெளியிடப்பட்டு வருகிறது.

இவ்விதழில் பிரதானமாக மானிட சமூகத்தின் நீண்ட நாள் கேள்வியான நாம் **ஏன் பிறந்தோம்**' என்பதற்கு மெய்ப்பிக்கும் தூதர் இறை ஆதாரத்துடன், அனுமதியுடன் வெளிப்படுத்திய பதில் வெளியிடப்படுகிறது. இது நமக்கு ஒரு நினைவூட்டலாக அமைகிறது. அந்நிகழ்ச்சிகளைச் சிந்தித்து, நினைவுபடுத்தி, நம்முடைய மாபெரும் தவறிலிருந்து விலகிக் கொண்டு, இறைவனின் ஏகோபித்த அதிகாரத்தை மட்டும் ஏற்றுக் கொண்டு இறைவனின் சாம்ராஜ்யத்திற்குள் மீண்டும் நுழைவோமாக!



# நாம் ஏன் படைக்கப்பட்டோம்?

மெய்ப்பிக்கும் தூதர் Dr. ரஷாத் கலீஃபா

நாம் ஒரு மாபெரும் குற்றத்தைச் செய்ததன் காரணமாகத்தான் இவ்வுலகில் பிறந்து இருக்கின்றோம். மேலும் இவ்வாழ்வு, நாம் நம்முடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு, அதிலிருந்து விலகி நம்மை மீட்டுக்கொண்டு இறைவனின் சாம்ராஜ்யத்திற்குள் மீண்டும் நுழைவதற்கு ஒரு வாய்ப்பாகும்.

இவை அனைத்தும் கோடிக் கணக்கான வருடங்களுக்கு முன்பு வானத்தில் உள்ள சமூகத்தாரிடையே ஒரு தர்க்கம் எழும்பிய போது நிகழ்ந்தது. (38:69) உயர்ந்த அந்தஸ்துடைய ஒரு படைப்பான சாத்தான், இறைவனால் தனக்கு அளிக்கப்பட்ட சக்திகள் மூலம், அவனும் இறைவனுடன் ஒரு கடவுளாக இருப்பதற்கான தகுதிகள் பெற்று விட்டதாக, அகந்தை மிக்க எண்ணங்களை வளர்த்துக் கொண்டான். இவ்விதமாக அவன் இறைவனின் பூரணமான அதிகாரத்திற்க்கெதிரான ஒரு அறைகூவலை விடுத்தான்.

சாத்தானுடைய எண்ணம் இறை நிந்தனையானது மட்டுமல்ல, அது தவறானதும் ஆகும். இறைவன் மட்டுமே கடவுளாக இருப்பதற்குரிய தகுதிகளும், திறன்களும் உடையவர், அவரைத் தவிர வேறு எவருக்கும் இல்லை .

சாத்தானுடைய இந்த இறைநிந்தனையின் விளைவாக வானுலக சமூகத்தாரிடையே பிளவுகள் தோன்றியது. இறைவனுடைய சாம்ராஜ்யத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் நான்கு வகை இனங்களாக வகைப்படுத்தப்பட்டனர்.

**1. வானவர்கள்** : இறைவனின் பூரணமான அதிகாரத்தை மட்டுமே ஏற்று ஆதரித்தவர்கள்.

**2. பிராணிகளும் அனைத்துப் படைப்புகளும்** : கலகம் செய்து பின்னர் இறைவனின் அழைப்பை ஏற்று திருந்தி குற்றத்தை ஒப்புக் கொண்டு விலகிக் கொண்டவர்கள்.

**3. ஜின்கள்**: சாத்தானுடன் ஒத்துப்போனவர்கள் அவனும் ஒரு கடவுளாக இருப்பதற்குரிய தகுதிகள் உள்ளவன் என்று ஏற்றுக் கொண்டவர்கள்.

**4. மானிடர்கள்** : எந்த ஒரு முடிவும் எடுக்காத படைப்புக்கள்; அவர்கள் இறைவனின் பூரணமான அதிகாரத்தைப் பற்றிய ஒரு உறுதியான நிலையை எடுக்கவில்லை .

# மிக்க அருளாளர்

இறைவனின் பூரண அதிகாரத்துக்கு ஆதரவளிக்காத படைப்புக்களை இறைவன் வெளியேற்ற வேண்டும் என வானவர்கள் எதிர்பார்த்தனர் (2:30) ஆனால் இறைவன் மிக்க அருளாளராக இருக்கின்றார். நம்முடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு அதிலிருந்து விலகிக் கொள்ள ஒரு வாய்ப்பளிக்க அவர் முடிவு செய்தார். மேலும் அவர்களுக்குத் தெரியாததெல்லாம் அவருக்குத் தெரியும் என்று வானவர்களுக்கு அறிவித்தார். (2:30) சில படைப்புக்கள் மீட்சிக்கான ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுவதற்குத் தகுதியானவர்கள் என்று இறைவன் அறிந்திருந்தார்.

நீங்கள் உங்களுக்கு விமானம் ஓட்டத் தெரியுமென்று கோரினால், உங்கள் கோரிக்கையைப் பரீட்சிப்பதற்குச் சிறந்த வழி உங்களிடம் ஒரு விமானத்தை கொடுத்து ஓட்டச் சொல்லி கேட்பதுதான். சாத்தானின் கோரிக்கைக்கு, அறைகூவலுக்குப் பதிலளிக்கும் விதமாக இறைவன் செய்தது, மிகச் சரியாக அதுதான். இறைவன் ஏழு அகண்ட பிரபஞ்சங்களைப் படைத்து, பின்னர் அதில் உள்ள பூமி என்றழைக்கப்படும் சிறு துகளில் சாத்தானை கடவுளாக நியமிப்பதாக இறைவன் வானவர்களுக்குத் தெரிவித்தார். (2:30) சாத்தானை ஒரு தற்காலிகக் கடவுளாக' நியமித்தது குறித்து குர்ஆன் (36:60) அளிக்கும் விபரங்கள் முந்திய வேதங்களை மெய்ப்பிப்பதாகவும் உள்ளது.

You, Lucifer, said in your heart ; "I will scale the heavens. Above the stars of God. I will set up my throne. I Will take my seat on the mount of Congregation, in the recesses of the North, I will ascend above the tops þf the clouds; I will be like the Most High!"

(Isaiah 14 : 13-15)

The devil then took Jesus up a very high mountain and displayed be fore him all the kingdoms of the world in their magnificence, promising \'All these will I bestow on you if you prostrate yourself in homage before me.,"At this Jesus, said to him, "Have with you, satan!

Scripture has it :

"You shall worship the Lord your God; Him ALONE shall you adore.'"

(Matthew 4:8-10) & (Luke 4 :5-8)

இறைவனின் திட்டப்படி மரணம் படைக்கப்பட்டு, பின்னர் மானுடர்களையும், ஜின்களையும் இவ்வுலகிற்குக் கொண்டு வர வேண்டியது இருந்தது. இவ்விதமாக அவர்கள் ஒரு தலைப்பட்சம் எதுவும் இல்லாமல் (எந்த பக்கமும் சாயாமல்) துவங்குகிறார்கள், மேலும் இறைவனின் பூரண அதிகாரத்தையோ அல்லது சாத்தானின் பல தெய்வக் கோட்பாட்டையோ ஆதரிப்பதில் தங்களது

முழு சுதந்திரத்தையும் பிரயோகம் செய்கிறார்கள். இந்தச் சிக்கலான முடிவை எடுப்பதற்கு இறைவனிடமிருந்து அவருடைய பூரண அதிகாரத்தை ஆதரித்து ஒரு செய்தியையும் அதே போல் சாத்தானிடமிருந்து அவனுடைய பல தெய்வக் கொள்கையைத் தூண்டும் ஒரு செய்தியையும் ஒவ்வொரு மானுடனும் பெற்றுக் கொள்கிறான்.

நமக்கு ஒரு துவக்கம் தருவதற்காக இவ்வுலகிற்கு அனுப்புவதற்கு முன் மிக்க அருளாளர் மானுடர்கள் அனைவரையும் தன் முன் ஒன்று கூட்டினார், மேலும் நாம் அனைவரும் அவர் மட்டுமே நம் இரட்சகரும் அதிபதியும் ஆவார் என்பதற்கு சாட்சியம் அளித்தோம். (7:172) இவ்விதம் இறைவனின் பூரண அதிகாரத்தை ஆதரிப்பது என்பது ஒவ்வொரு மானுடன் உடனும் கலந்திருக்கும் ஓர் இயற்கையான உள்ளுணர்வாகும்.

கலகக் காரர்களை மரணத்தில் ஆழ்த்திய பின்னர், மானுடர்களுடைய மற்றும் ஜின்களுடைய ஆத்மாக்கள் சிறப்பு வாய்ந்த ஒரு களஞ்சியத்தில் வைக்கப்பட்டன. பின்னர் இறைவன் பரீட்சைக் காலத்தில் ஜின்கள் மற்றும் மானிடர்களின் ஆத்மாக்களைக் குடி வைப்பதற்கேற்றவாறு உடம்புகளைப் படைத்தார். முதல் ஜின்னுடைய உடம்பு நெருப்பால் படைக்கப்பட்டு சாத்தான் அந்த உடம்புக்கென்று நியமிக்கப்பட்டான். முதல் மனித உடம்பு உலகுக்குரிய பொருளான களி மண்ணால் படைக்கப்பட்டது. (15:26) மேலும் இறைவன் முதல் மானுட ஆத்மாவை அவ்வுடம்புக்கென நியமித்தார். இறைவனின் திட்டப்படி வானவர்கள் பூமியில் மனிதர்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்காக காற்று மற்றும் மழை ஆகியவற்றை ஓட்டுவது, உணவுகளைப் பங்கிடுதல் போன்ற சேவைகளை மனிதனுக்குச் செய்ய வேண்டியது இருந்தது. இவ்வுண்மை குர்ஆனில் உவமானமாகக் கூறப்படுகிறது. உமது இரட்சகர் வானவர்களிடம் கூறினார். “ஆதமுக்கு முன்னால் சிரம் பணியுங்கள்”

சாத்தான் மானிட இனத்திற்குச் சேவை செய்யக்கூடிய எதையும் செய்வதற்கு மறுத்து விட்டான். (2:34, 7:11, 17:61, 18:50, 20:116)

ஆதமுடைய உடல் பூமியில் இருந்த அதே சமயம் அவர் ஆன்மா, உண்மையான அம்மனிதர் மிகவும் வெளியில் உள்ள பிரபஞ்சத்தில் உள்ள சொர்க்கத்தினுள்அனுமதிக்கப்பட்டார்.இறைவன்ஆதமுக்கு தடுக்கப்பட்ட மரத்தை உருவகமாகக் கொண்டு சில கட்டளைகளை வழங்கினார். மேலும் ஆதமுக்குத் தோழனாக அவனுடைய சாத்தானியச் செய்தியைக் கூறுவதற்கு சாத்தான் நியமிக்கப்பட்டான். மற்றவை சரித்திரம்.

ஒவ்வொரு முறை ஒரு மானுடன் பிறக்கும் போதும் ஆன்மாக்களின் களஞ்சியத்திலிருந்து ஒரு மனிதன் அந்தப் புதிய குழந்தைக்கென நியமனம் செய்யப்படுகிறான். இறைவன் அவருடைய ஞானத்திற்கு ஏற்ப ஆன்மாக்களை நியமிக்கிறார். ஒவ்வொரு ஆன்மாவும் ஒரு குறிப்பிட்ட உடம்பில் நியமிக்கப்படுவதற்குத் தகுதியானதாக உள்ளது, மேலும் அது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் வாழ்கிறது. நல்ல ஆன்மாக்கள் எவை என்றும் தீய ஆன்மாக்கள் எவை என்றும் இறைவன் மட்டுமே அறிவார். இறைவனின் திட்டப்படியே நம் குழந்தைகள் நமது வீடுகளுக்கு நியமிக்கப்படுகின்றன.

சாத்தானின் கண்ணோட்டத்திற்குப் பிரதிநிதியாக ஒரு சுதந்திரமான ஜின்னுடைய ஆன்மாவும் அந்தப் புதிய மானுடனுக்கென்று நியமிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஜின்னுடைய ஸ்தூல உடம்பும் அந்த ஜின்னுடைய பெற்றோர்களில் இருந்து பிறக்கிறது. அதே சமயம் அந்த ஜின்னின் ஆன்மா தனிப்பட்ட ஒன்றாகும். ஜின்கள் சாத்தானின் சந்ததியர் ஆவர் (7:27, 18:50) நியமிக்கப்பட்ட அந்த ஜின், அம்மனிதனின் பிறப்பு முதல் இறப்புவரை அவனுடன் இருக்கிறது. மேலும் தீர்ப்பு நாளில் முக்கிய சாட்சியாகவும் பணி செய்கிறது. (50:23)

நமது உள்ளங்களில் மானிட ஆன்மாவுக்கும், ஜின்னுடைய ஆன்மாவுக்கும், அவர்கள், இருவரும் ஒரு கண்ணோட்டத்தில் ஒத்துப்போகும் வரை தொடர்ந்த விவாதம் நடைபெறுகிறது.

## ஆதிபாவம் ORIGINAL SIN

ஆதிபாவம் என்பது, ஆதம் தடுக்கப்பட்ட மரத்திலிருந்து புசித்த போது இறைவனின் சட்டத்தை மீறியது தான் என்ற பொதுவான நம்பிக்கைக்கு மாற்றமாக, மிகப் பெரிய தர்க்கத்தின் போது நாம் இறைவனின் பூரண அதிகாரத்தை ஆதரிக்காததே ஆதிபாவம் ஆகும்.

ஒரு மானிடன் தன்னுடைய ஜின் கூட்டாளியை ஆதிபாவத்தை ஒப்புக் கொண்டு அதிலிருந்து விலகி, இறைவனின் பூரண அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளும்படி சமாதானம் செய்து விட்டால், அவ்விரு படைப்புக்களும் தீர்ப்பு நாள் அன்று இறைவனின் நிரந்தர சாம்ராஜ்யத்திற்குள் மீட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

ஆனால் சாத்தானின் பலதெய்வக் கண்ணோட்டத்தை ஆதரிக்கும் படி அம்மனிதனை அவனுடைய ஜின் கூட்டாளி சமாதானம் செய்து விட்டால் அப்போது அவ்விரு படைப்புக்களும் இறைவனின் சாம்ராஜ்யத்திலிருந்து நிரந்தரமாக வெளியேற்றப் படுகின்றனர்.

தன்னுடைய கண்ணோட்டத்தின் வளர்ச்சிக்காக சாத்தானும், அவனுடைய பிரதிநிதிகளும் எந்தச் சக்தியுமற்ற படைப்புக்களான முஹம்மத், ஜீசஸ், மேரி போன்றோரை இறைவனுக்கு இணையாகவும், துணையாகவும் ஆக்குவதை ஆதரிக்கின்றனர். நமது பல தெய்வக் கொள்கை சார்ந்த தூண்டுதல்களினால்தான் நாம் இங்கே இருக்கிறோம், எனவே நம்மில் பலர் எளிதில் சாத்தானுக்கு இரையாகி விடுகின்றோம்.

ஒரு கடவுளாக சாத்தானின் தகுதியின்மை, அவனுடைய சாம்ராஜ்யம் முழுவதும் நிலவும் குழப்பங்கள், நோய்கள், விபத்துக்கள், துன்பங்கள், ஆகியவற்றால் ஏற்கனவே நிரூபிக்கப்பட்டு விட்டது. (36:66) மறுபுறத்தில், சாத்தானைக் குற்றம் சுமத்தி, இறைவனின் பூரண அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு, சக்தியற்ற, இறந்து விட்ட மனிதர்களான ஜீசஸ், முஹம்மத் போன்றோரை இணை வைப்பதிலிருந்து விலகிக் கொள்பவர்கள் இறைவனின் பாதுகாவலுக்குள் மீட்டுக் கொள்ளப் படுகிறார்கள். அவர்கள் மிகச் சிறப்பான அழகான ஒரு வாழ்வை இவ்வுலகிலும், மறுமையிலும் அனுபவிக்கிறார்கள்.

நமது பல தெய்வக் கொள்கை சார்ந்த சிந்தனைகளை எண்ணங்களை வெளிப்படுத்தும் முகமாக சோதனைகளின் வரிசையாகவே இவ்வுலக வாழ்வு வடிவமைக்கப் பட்டிருப்பதன் காரணத்தினால், (இணைவைத்து வணங்குவது) மன்னிக்கப்படாத ஒரே பாவம் (4:48, 116) இறைவனின் பூரண அதிகாரத்தையோ அல்லது சாத்தானின் இணைவைக்கும் கண்ணோட்டங்களையோ ஆதரிக்க, நாம் எடுக்கும் முடிவை வெளிப்படுத்தும் விதமாக இவ்வுலகம் இறைவனால் வடிவமைக்கப் பட்டுள்ளது. (67:12)

காலை தொழுகையையும், வெப்பமான நீளமான நாட்களில் நோன்பையும், கடைப்பிடிப்பதன் மூலம் இறைவனின் சட்டங்களை ஆதரிக்கும் நமது விருப்பத்தைச் சோதிக்கும் வண்ணமாகவே, இரவும் பகலும் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கிறது. இறைவனின் பூரண அதிகாரம் குறித்து முழுமையான உறுதியுடன் இருப்பவர்கள் மட்டுமே மீட்டுக் கொள்ளப் படுகிறார்கள். (26.89)

*****

# அர்த்தம் அனர்த்தம்

குர் ஆன் மொழிபெயர்ப்புக்கள், குர்ஆனின் அடிப்படையான ஒரிறைக் கொள்கைக்கு முரண்படாமல் இருக்க வேண்டும். மேலும் அதில் உள்ள மற்ற வசனங்களுக்கு முரண்படாமலும் இருக்க வேண்டும். ஏனெனில் குர்ஆனில் முரண்பாடுகள் இல்லை என்று இறைவன் தெளிவாகக் கூறுகிறார். (4 : 82)

ஆயினும் இன்று நபியின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களை நம்பிப் பின்பற்றுபவர்கள் குர் ஆனில் முரண்பாடுகள் இருப்பதாகவும் அம்முரண்பாடுகளை ஹதீஸ்கள்தான் நிவர்த்தி செய்வதாகவும் (இதனால் தான் நாஸிக்-மன் ஸீக், குர் ஆனின் சில வசனங்கள் மாற்றப்பட்டு விட்டதாகக் கூறப்படும் தத்துவம் - உருவானது) வாதிடுகின்றனர். இவ்வாறே அவர்களால் அறிஞர்கள் என்று எண்ணப்படுபவர்கள், அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றனர். அவர்கள் விளங்கிக் கொள்ள முடியாத வசனங்களை, முரண்பாடு எனக்கருதிக் கொள்கின்றனர்.

உண்மையில் ஹதீஸ்களும் மார்க்க ஆதாரம் என்று நம்பி அவற்றின் கருத்துக்களை இஸ்லாத்தின் பின் வாயில் வழியாக உள்ளே நுழைத்ததனால்தான் இவர்களுக்குக் குர் ஆனுடைய வசனங்களில் முரண்பாடுகள் இருப்பது போல் தோன்றுகிறது. அது மட்டுமின்றி, <u>ஹதீஸ்களின் அடிப்படையில் குர்ஆனுக்குச் செய்யும் மொழி பெயர்ப்புக்கள் அனைத்தும் குர் ஆனின் அடிப்படைத் தத்துவமான ஓரிறைக் கொள்கைக்கும் குர் ஆனுடைய - மற்ற வசனங்களுக்கும் முரண்பட்டதாகவே உள்ளன.</u>

ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்படும் மொழி பெயர்ப்புக்கள் முஹம்மதுநபியை இறைவனுக்கு இணையாகவும், துதிபாடிக் கொண்டிருக்கவும் தூண்டுகிறது. அவ்விதமாக இவர்கள் சிதைத்து வைத்திருக்கும் மற்றொரு வசனமான 33:6 க்கு ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கும் மொழி பெயர்ப்புக்களையும், அதன் சரியான மொழிபெயர்ப்பை இந்த மாத 'அர்த்தம் - அனர்த்தம்' பகுதியில் நாம் காண்போம்.

### 33:6 க்கு ஜான் டிரஸ்ட் மொழிபெயர்ப்பு.

இந்த நபி முஃமின்களுக்கு அவர்களுடைய உயிர்களை விட மேலானவராக இருக்கிறார். இன்னும், அவருடைய மனைவியர் அவர்களுடைய தாய்மார்களாக இருக்கின்றனர் (ஒரு முஃமினின் சொத்தை அடைவதற்கு) மற்ற முஃமின்களை விடவும் (தீனுக்காக நாடு துறந்த) முஹாஜிர்களை விடவும் சொந்த பந்துக்களே சிலரை விட சிலர் நெருங்கிய (பாத்தியதையுடைய) வர்களாவார் கள். இதுதான் அல்லாஹ்வின் வேதத்திலுள்ளது; என்றாலும், நீங்கள் உங்கள் நண்பர்களுக்கு நன்மை செய்ய நாடினால் (முறைப்படி செய்யலாம்) இது வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.

●○●

### 33:6 க்கு அப்துல் ஹமீது பாக்கவியின் மொழிபெயர்ப்பு.

விசுவாசிகளுக்கு அவர்களுடைய உயிர்களை விட (நமது தூதரான) நபிதான் மிக்கப்பிரதான மானவர். அவருடைய மனைவிகளோ அவர்களுடைய தாய்மார்களாவர் (ஒரு முஸ்லிமுடைய சொத்தை அடைய மற்ற) விசுவாசிகளை விடவும், ஹிஜ்ரத்துச் செய்தவர்களை விடவும் ஒரு (முஸ்லிமுடைய) சொந்த பந்துக்கள் தாம், அல்லாஹ்வுடைய (இவ்) வேதத்திலுள்ள பிரகாரம் நெருங்கிய (உரிமையுடைய) வர்களாவர். (ஆகவே, அவரவர் விகிதாச்சாரப்படி பொருளைப் பந்துக்களிடையே பாகித்துக் கொடுக்க வேண்டும் என்றாலும்), உங்கள் நண்பர்களிடம், நீங்கள் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறே வேதத்தில் வரையப்பெற்றுள்ளது.

●○●

### 33:6 க்கு K.A. நிஜாமுத்தீன் குழுவினரின் மொழிபெயர்ப்பு.

இந் நபியாகிறவர் முஃமின்களுக்கு அவர்களுடைய உயிர்களை விட (அன்பில்) மிக்க நெருங்கியவராய் இருக்கின்றார். அவருடைய மனைவியர்கள் அவர்களுடைய தாய்களாக இருக்கின்றனர்; அல்லாஹ்வின் வேதத்தில் (கூறப்பட்டுள்ள சொத்துரிமை விஷயத்தில்) முஃமின்களை விடவும், முஹாஜிர்களை விடவும் உறவினர்களே, அவர்களில் சிலர் சிலரைவிட (உரிமை பாத்தியதையில்) மிக்க நெருங்கி யவர்களாவார்கள் உங்களுடைய நண்பர்களுக்கு ஏதேனும் ஒரு நன்மையை நீங்கள்

செய்து கொண்டால் தவிர; (முறைப்படி வஸியத்தின் மூலம் நீங்கள் விரும்பியவருக்குக் கொடுக்கலாம்); இது வேதத்தில் வரையப்பட்டதாக இருக்கிறது.

●○●

## 33:6 வசனத்திற்கு காதியானிகளின் மொழிபெயர்ப்பு

33:7 நம்பிக்கை கொண்டு இருப்பவர்களுக்கு அவர்களின் உயிர்களை விட நபி மிக நெருக்கமானவராவார். அவருடைய மனைவியர் அவர்களின் தாய்மார்களாவார்கள். மேலும் நம்பிக்கையாளர்கள் மற்றும் இடம், பெயர்ந்து வந்தவர்கள் ஆகியோரைவிட அல்லாஹ்வின் வேதத்தின் அடிப்படையில் இரத்த உறவினர்கள் சிலர் சிலருக்கு மிகவும் நெருங்கியவர்கள் ஆவர். ஆனால் உங்கள் நண்பர்களுடன் நன்முறையில் நீங்கள் நடந்து கொள்வது நல்லது. இது (வும்) வேதத்தில் எழுதப்பட்டதாகும்.

●○●

## 33:6 IFT மொழிபெயர்ப்பு

திண்ணமாக நம்பிக்கையாளர்களுக்கு அவர்களின் உயிர்களைவிட நபிதான் முன்னுரிமை பெற்றவராவார். மேலும், நபியின் மனைவியர் அவர்களுக்கு அன்னையராவர். ஆயினும், அல்லாஹ்வின் வேதத்தின் படி - ஏனைய பொது முஸ்லிம்களை விடவும், ஹிஜ்ரத் செய்து வந்தவர்களை விடவும் இரத்த பந்த உறவினர்கள் தாம் ஒருவர் மற்றவருக்கு உதவி புரிவதில் அதிக உரிமையுடைவர்கள் ஆவர். ஆயினும் உங்கள் நண்பர்களுக்கு நீங்கள் ஏதேனும் நன்மை (செய்ய விரும்பினால்) செய்து கொள்ளலாம். இந்த விதி இறை வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.

●○●

## 33:6 பிக்தால் மொழிபெயர்ப்பு

The Prophet is Closer to the believers than theirselves, and his wives are (as) their mothers. And the Owners of kinship are one closer one to another in the ordinance of Allah than (other) belivers and the fugitives (who fled from mecca) except that ye should do kindness to your friends. This is written in the Book (of nature).

●○●

### 33:6 அப்துல்லாஹ் யூசுப் அலி மொழிபெயர்ப்பு.

The Prophet is closer to the believers than their own selves, and his wives are their mothers. Blood-ralations among each other have closer personal ties, In the Decree of Allah, than (the brother hood of ) Believers and Muhajirs. Never the less do ye what is just to your closest friendly: such is the writing of the Decree (of Allah)

### 33:6 மெய்ப்பிக்கும் தூதரின் ஆங்கில மொழிபெயர்ப்பு

The Prophet is closer to the believers than they are to each other, and his wives are like mothers to them. The relatives ought to take care of one another in accordance with God's scripture. Thus the believers shall take care of their relatives who immigrate to them, provided they have taken care of their own families first. These are commandments of this scripture.

### 33 : 6 சரியான தமிழ் மொழிபெயர்ப்பு

இந்த நபி, நம்பிக்கை யாளர்களுக்கு, அவர்கள் ஒருவருக்கொருவரை விட நெருக்கமானவர், மேலும் அவருடைய மனைவியர் அவர்களுக்குத் தாய்மார்களைப் போன்றவர்கள். இறைவனின் வேதத்தில் உள்ளதை ஒட்டி, உறவினர்கள் ஒருவருக் கொருவர் பராமரித்துக் கொள்ள வேண்டும். எனவே நம்பிக்கை யாளர்கள் முதலில் தங்கள் குடும்பத்தைப் பராமரித்து கொண்ட பின்னர்தான், தங்களிடம் புறப்பட்டு வந்து சேர்ந்த உறவினர்களைப் பராமரித்துக் கவனித்துக் கொள்ள வேண்டும். இவை, இவ்வேதத்தின் கட்டளைகளாகும்.

மேற்கண்ட மொழிப்பெயர்ப்புக்கள் அனைத்திலும் முதல் பகுதி நம்பிக்கை கொண்டவர்களுக்கு, அவர்களுடைய உயிர்களை விட மேலானவராக இருக்கிறார். மேலும் அவருடைய மனைவியர் அவர்களுக்குத் தாய்மார்கள் ஆவர்' என்றே மொழி பெயர்க்கப்பட்டு உள்ளதைக் காண்கிறோம்.

'அந்நபிய்யு அவ்லா பில் முஃமினீன் மின் அன ஃபுஸிஹிம் என்ற வாசகத்தில் இடம் பெறும்மின்

அன் ஃபுஸிஹிம்' என்ற வார்த்தைக்கு 'உயிர்களை விட' என்று மொழிபெயர்த்துள்ளனர். இது 2:54ல் உங்கள் அகந்தையைக் கொல்லுங்கள் என்பதற்குப் பதில் உங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்ளுங்கள் என்று மொழிபெயர்த்ததைப் போன்ற ஒரு தவறாகும். (அவ்வசனத்தில் அன்ஃபுஸகும் என்ற வார்த்தை இடம் பெறுகிறது. (பார்க்க பு.நி. மார்ச் இதழ்)

**ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் பிரதானமாகக் கருதுவது தன்னுடைய இன்னுயிரைத்தான். தன் உயிரைவிட வேறு எதையும் மனிதன் பெரிதாக நேசிப்பதில்லை. பிரதானமாகக் கருதுவதில்லை . அப்படி ஒரு மனிதன் "நான் என்னுயிரை விட உன்னை அதிகம் நேசிக்கின்றேன்" என்று கூறுவானாயின் அவனைப் பொய்யன் என்றும் நயவஞ்சகன் என்றும் மனிதர்கள் அனைவரும் நன்கறிந்து கொள்ள முடியும். அவ்வாசகம் வார்த்தை அழகுக்காக, அல்லது வலியுறுத்திக் கூறுவதற்காகக் கூறப்படும் சொற்களே அன்றி அவை ஒரு போதும் உண்மையாக இருக்க முடியாது.**

எந்த ஒரு மொழியிலும் ஒரு வார்த்தைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தங்கள் இருக்குமாயின், நாம் இடம்பெறும் வாக்கியத்தைப் பொறுத்து அந்த இடத்தில் இடம் பெறும் வார்த்தைக்கு எந்த அர்த்தம் பொருந்துமோ அதை வைத்துப் பொருத்தி கொள்கிறோம். உதாரணமாகத் தமிழில் பால் என்ற வார்த்தைக்கு அருந்தக் கூடிய பால், மற்றும் ஆண்பால், பெண்பால் என்ற அர்த்தங்கள் உள்ளன. இவற்றை நாம் இடத்தைப் பொறுத்துப் புரிந்து கொள்கிறோம். பாலியல் கல்வி' என்ற சொல்லுக்கு அருந்தக்கூடிய பாலின் இயல்பைப் பற்றிய கல்வி என்று நாம் புரிந்து கொள்வதில்லை. 'பால் வியாபாரம்' என்பதை ஆண்பால், பெண்பால் வியாபாரம் என்று புரிந்து கொள்வதில்லை. அந்தந்த இடத்திற்கு எது பொருத்தமோ அதை நம் அறிவு கொண்டு சிந்தித்து விளங்கிக் கொள்கிறோம். இது ஒவ்வொரு மொழியிலும் உள்ள ஒரு விஷயமே.

●○●

அவ்வாறே, இறைவன் மனிதர்கள் பேசிக் கொண்டிருக்கக் கூடிய ஒரு உயிருள்ள மொழியான அரபியில் இறுதி வேதத்தை இறக்கியிருப்பதால் அதில் அவர் பயன்படுத்தும் சொற்களுக்கு இரண்டு அர்த்தங்கள் இருக்கும் பட்சத்தில் அந்த இடத்திற்கு எந்த அர்த்தம் பொருந்துமோ அதையே பொருத்திக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக '**ஆயத்**' என்ற வார்த்தைக்கு **வசனம்** மற்றும் அத்தாட்சி ஆகிய பொருள்கள் உள்ளன எனும்போது அந்த இடத்திற்கு எது பொருந்துமோ அதையே பொருத்திக் கொள்ள வேண்டும். எந்த இடத்தில் எந்த அர்த்தம் பொருந்தும் என்பதை அவ்வாசகத்தை வைத்து நிச்சயம் நாம் புரிந்து கொள்ள முடியும். அவ்வாறு, தான் நாமும் புரிந்து கொள்கிறோம். மற்றவர்களும் புரிந்து கொள்கிறார்கள். இரண்டு அர்த்தங்கள் தரக் கூடிய ஒரே சொல் எல்லா மொழிகளிலும் இருப்பது போல் அரபியிலும் உள்ளன. (மேலும் சில உதாரணங்கள் '**பய்யின**' என்ற வார்த்தை மற்றும் 'மா' என்ற பதப் பிரயோகம்) அவற்றை அந்தந்த இடத்திற்கு ஏற்ப பொருத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வசனத்தில் மின் அன்ஃபுஸி ஹிம்' என்ற பதப் பிரயோகத்திற்கு உங்களை (உயிர்களை) விட' என்றும் பொருள் கொள்ள முடியும் என்றாலும், இவ்விரண்டில் எது சரியானது, குர்ஆனின் கொள்கைகளுக்கும் மற்ற வசனங்களுக்கும் முரணில்லாதது என்றும் இங்கே நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த இடத்தில் 'மின் அன்ஃபுஸிஹிம்' என்ற வார்த்தைக்கு 'உங்கள் உயிர்களை விட' என்று அர்த்தம் செய்வது குர்ஆனின் அடிப்படைக் கு , தெளிவான , நேரடியான வசனங்களுக்கு முரணானது.

ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் பிரதானமாகக் கருதுவது தன்னுடைய இன்னுயிரைத்தான். தன் உயிரைவிட வேறு எதையும் மனிதன் பெரிதாக நேசிப்பதில்லை . பிரதானமாகக் கருதுவதில்லை . அப்படி ஒரு மனிதன் "நான் என்னுயிரை விட உன்னை அதிகம் நேசிக்கின்றேன்" என்று கூறுவானாயின் அவனைப் பொய்யன் என்றும் நயவஞ்சகன் என்றும் மனிதர்கள் அனைவரும் நன்கறிந்து கொள்ள முடியும். அவ்வாசகம் வார்த்தை அழகுக்காக, அல்லது வலியுறுத்திக் கூறுவதற்காகக் கூறப்படும் சொற்களே அன்றி அவை ஒரு போதும் உண்மையாக இருக்க முடியாது.

ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்ட இம்மொழி பெயர்ப்புக்களை நம்பி 'நாங்கள் எங்கள் உயிரை விட நபியை நேசிக்கிறோம், மதிக்கிறோம் என்று கூறுபவர்கள் தங்கள் கூற்றில் உ ண் மை யா ள ர் க ளா க இருக்கின்றோமா என்பதை ஒரு நிமிடம சிந்தித்துப்பார்க்க வேண்டும். இது நயவஞ்சகமில்லையா?
உண்மையில் அவ்வாறு செய்வது இயலக்கூடிய காரியமா என்பது ஒரு புறம் இருக்கட்டும்.

நம்பிக்கை கொண்டவர்கள் இறைவனை நேசிப்பதில் மிகவும் உறுதி யானவர்கள் என்று குர்ஆன் நம்பிக்கையாளருக்கு இலக்கணம் கூறுகிறது. (2:165) உயிரைவிட அதிகமாய் நபியை நேசித்து விட்டால், அதைவிட அதிகமாக இறைவனை நேசிப்பது எப்படிச் சாத்தியமாகும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இங்கே இறைவனுக்கு இணையாகவும், துணையாகவும் முஹம்மத் நபியை இணை வைக்கத் தூண்டும் சாத்தானின் சூழ்ச்சியை விளங்கிக் கொள்ள வேண்டும். இறைவன் மட்டும்' என்பது குர்ஆனின் அடிப்படைச் செய்தி. இறைவனுடன் மற்றவர்களும்' என்பது சாத்தானின் அடிப்படைச் செய்தி. மேற்கண்ட மொழிபெயர்ப்புக்கள் இறைவன் சார்பானதா? அல்லது சாத்தான் சார்பானதா? என்பதை சிந்தனையுடையவர்கள் நிச்சயம் விளங்கிக் கொள்ள முடியும்.

இம்மொழி பெயர்ப்பின் அடிப்படையில் இன்றைய முஸ்லிம் சமுதாயம் முஹம்மத் நபியை எந்த அளவுக்கு இறைவனுடன் இணைத்து வணங்கிக் கொண்டும், துதித்துக் கொண்டும் உள்ளது என்பதையும் இங்கே நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நபி கண்ணியத்திற்கும் மரியாதைக்கும் உரியவர் என்று குர்ஆன் கூறுகிறது. ஆனால் வரம்பு மீறி, உயிருக்கும் மேலாக, அதாவது இறைவனுக்கு இணையாக அவருக்கு கண்ணியம் அளிக்கும்படி குர்ஆன் ஒரு போதும் கட்டளையிடவில்லை. நபியும் அவ்வாறு கோரவில்லை. ஒருவருக்கு இல்லாத சிறப்புக்கள் அவருக்கு இருப்பதாகக் கூறுவது உண்மையில் அவரைக் கேலி செய்வதாகும் என்பதை முஸ்லிம்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

குர் ஆனில் நபிக்கு இறைவன் கூறாத சிறப்புக்களை, மனிதர்கள் முஹம்மத் நபியின் மேல் கொண்ட பக்தியால், அவர் மீதே இட்டுக்கட்டிய ஹதீஸ்கள் கூறுகின்றன. நபியின் சிறப்புக்களைப் பற்றிக் கூறும் ஏராளமான குர் ஆன் வசனங்கள் இருக்கும் போது ஹதீஸ்களில் கூறப்படும் சிறப்புக்களை இறைவன் ஏன் குர்ஆனில் கூறவில்லை என்பதை அறிவுடையோர் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மேலும் இவ்வசனத்தில் 'அந்நபிய்யு' என்ற பதம் இடம் பெறுவதால் இது நபி முஹம்மத் வாழ்ந்த காலத்திற்குரிய , அக்காலத்தில் மட்டுமே பின்பற்ற இயலக் கூடிய, வசனம் ஆகும். இதைத் துஷ்பிரயோகம் செய்து மறுமைக் காலம் வரை முஹம்மத் நபியை இறைவனுக்கு இணை வைத்துக் கொண்டிருக்குமாறு இவ்வசனம் கூறவில்லை. (பார்க்க பு.நி. டிசம்பர் 99 இதழ்)

தூதர்களிடத்தில் எந்த வித பேதமும் பாராட்டக் கூடாது, 'எல்லா நபிமார்களும் எங்கள் நபிமார்களே, - அவர்கள் அனைவரையும் நாங்கள் நம்புகிறோம் என்று கூற வேண்டும் என்பது குர்ஆனில் திரும்பத் திரும்பக் கூறப்படும் கட்டளை (2:136, 285, 3:84) ஆயினும் முஹம்மத் நபியை மட்டும் மற்ற நபிமார்களிடம் இருந்து பிரித்து, அவருக்கு மற்ற நபிமார்களுக்கு இல்லாத சிறப்புக்கள் இருப்பதாக இன்றைய முஸ்லிம்கள் அனைவரையும் எண்ண வைப்பதற்கு இத்தகைய தவறான மொழி பெயர்ப்புக்களே காரணம். குர்ஆனின் வழிகாட்டுதல்களுக்கு மாறு செய்ய வைக்கும் மொழிபெயர்ப்பு சரியான மொழிபெயர்ப்புத்தானா என்பதையும் வாசகர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும், குர் ஆனில், தூதர்களும் நம்மைப் போன்ற மனிதர்களே (18: 110) அவர்களுக்கு உள்ள சிறப்பு இறைவனிடமிருந்து அவர்கள் பெற்று உலகிற்குத் தரும் செய்தியே அன்றி அவர்கள் யாரும் தனிப்பட்ட முறையில் எந்த சிறப்புக்கும் உரியவர்கள் அல்லர் என்று கற்றுக் கொள்கிறோம். அவர்களும் தவறுகள் செய்யக் கூடியவர்களே, அவர்களுடைய தவறுகளை நாம் பின்பற்றக் கூடாது. சரியானவற்றை மட்டுமே பின்பற்ற வேண்டும் என்று கற்று கொள்கிறோம்.

(17:73-75, 33:37, 40:55, 66;48:2; 66:1; 80:1-10; 93:7; 60:40; 37:139-142; 28:15-21)

எனவே மேற்கண்ட மொழிபெயர்ப்புக்களில் 'நபி நம்பிக்கையாளர்களுக்கு அவர் களுடைய உயிரைவிட மேலானவர்' என்பது குர் ஆனின் அடிப்படைக்கு முரணானது, தவறானது என்றும், உயிரைவிட அதிகமாக நேசிக்கப்பட வேண்டியவர் இறைவன் ஒருவர் மட்டுமே என்றும் நாம் அறிந்து கொள்கிறோம். இந்த வசனத்திற்கு மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத் கலீஃபாவின் மொழி பெயர்ப்பான 'நபி, நம்பிக்கை யாளர்களுக்கு அவர்கள் ஒருவருக் கொருவரை விட நெருக்கமானவர்'

என்பதே சரியான மொழி பெயர்ப்பு, குர்ஆனின் கொள்கைக்குகந்த மொழி பெயர்ப்பு, இறைவனின் சார்பான மொழிபெயர்ப்பு என்றும் விளங்கிக் கொள்கிறோம். தொடர்ந்து, அவ்வசனத்தின் முழுமையான சரியான மொழி பெயர்ப்பை ஹதீஸ்களின் அடிப் படையில் செய்திருக்கும் மொழி பெயர்ப்புக்களுடன் ஒவ்வொரு கருத்துக்களையும் ஒப்பிட்டு படியுங்கள்.

இவ்வாசகத்தை அடுத்து அவ்வசனத்தில் மேலும் அவருடைய மனை வியர் அவர்களுக்குத் தாய்மார்கள் போன்றவர்கள்' என்பதைத் 'தாய்மார்கள்' என்றே மொழி பெயர்த்திருக்கிறார்கள். இவற்றில் எது சரியானது, உண்மைக்கு நெருக்கமானது என்பதையும் சிந்திக்க வேண்டும்.

இங்கே நம்மால் ஒரு தகவலைக் கூறாமல் இருக்க முடியவில்லை. உபை இப்னு கஅப் எழுதிய குர் ஆன் பிரதியில், மேலும் நபியின் மனை வி மார் கள் நம்பிக்கையாளர்களுக்குத் தாய்மார்கள் போன்றவர்கள்' என்பதைத் தொடர்ந்து நபி அவர்களுக்குத் தந்தையாவார் என்றும் எழுதியிருந்தார் தன்னுடைய குர்ஆன் பிரதியில் தன்னிஷ்டத்திற்கு விளையாடும் ஒருவர் உண்மையான நம்பிக்கையாளராக இருக்க முடியுமா? பின் எப்படி இவர்கள் உபை இப்னு கஅப் அறிவிக்கும் ஹதீஸ்களை ஏற்றுக் கொள்கிறார்கள்?

இத்தகவல் ஹதீஸ்களில் உண்மை என்று பதியப்பட்டுள்ளது. இதனை இவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பான அப்துல்லா யூசுப் மொழி பெயர்ப்பில் (அடிக்குறிப்பு எண் 3674)ல் இத்தகவலைக் (பழைய பதிப்பு) குறிப்பிடுகிறார். ஆனால் இப்போது வெளிவரும் பதிப்புக்களில் இத்தகவலை நீக்கி விட்டுத்தான் அச்சிடுகிறார்கள். இங்கே நாம் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம், இந்த வசனத்திற்கு முந்திய வசனத்தில்தான் இறைவன் "உங்கள் வளர்ப்புக் குழந்தைகளுக்கு அவர்களுடைய குடும்பத்தினர் இட்ட பெயரையே கூறுங்கள்" என்று கூறுகிறார். முஹம்மத் நபியின் வளர்ப்பு மகனான ஜைதுக்கும் கூட முஹம்மத் நபி தந்தையல்லர்' என்றும் கூறுகிறார். (33:40)

வாசகர்களை, அனைத்து மொழிபெயர்ப்புக்களையும் தூதர் ரஷாத் கலீஃபாவின் மொழிபெயர்ப்போடு ஒப்பிட்டுச் சிந்திக்குமாறு மீண்டும் கேட்டுக் கொள்கிறோம். ❖ ❖ ❖ ஆர்.

DR. ரஷாத் கலீஃபாவின் ஆங்கில குர் ஆன் மொழிபெயர்ப்பின்

# அறிமுகவுரை

இது மனித குலத்திற்கு இறைவனின் இறுதிச் செய்தியாகும். இறைவனின் அனைத்து நபிமார்களும் (வேதம் அருளப்பெற்ற தூதர்கள்) இவ்வுலகிற்கு வந்து விட்டனர், மேலும் அனைத்து வேதங்களும் சேர்ப்பிக்கப் பட்டு விட்டன இறைவனின் நபிமார்கள் சேர்ப்பித்த எல்லாச் செய்திகளையும் தூய்மைப் படுத்தி, ஒன்றினைத்து ஒரே செய்தி ஆக்கி, இதன் பின் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரே மதமாக அடிபணிதல் (Submission Islam) (3:19, 85) மட்டுமே இருக்கிறது என்பதைப் பிரகடனம் செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டது.

அடிபணிதல் என்னும் மதத்தில் இருப்பதன் மூலம் நாம் இறைவனின் பூரணமான அதிகாரத்தை தெளிவாகப் புரிந்து கொண்டு, உணர்ந்து, இறைவனிடம் மட்டுமே எல்லாச் சக்திகளும் உள்ளன என்ற அசைக்க முடியாத உறுதிப்பாட்டை அடைகிறோம்; எந்த ஒன்றுக்கும் அவரைச் சார்ந்திராத தன்னிறைவான எந்தச் சக்தியும் இல்லை இத்தகைய ஒரு தெளிவான புரிந்து கொள்ளலை, உணர்வை நாம் அடைவதன் இயற்கை விளைவு என்னவெனில், இறைவனுக்கு மட்டுமே நம் வாழ்வையும், வணக்கத்தையும் அர்ப்பணிப்பதேயாகும்.

இதுவே பழைய ஏற்பாடு (Old Testament) புதிய ஏற்பாடு (New Testament) மற்றும் இந்த இறுதி ஏற்பாடு (Final Testament-ALQURAN) ஆகிய அனைத்து வேதங்களிலும் உள்ள முதல் கட்டளையாகும்.

> கேளுங்கள் இஸ்ரவேலர்களே, இரட்சகரான நமது இறைவன் ஒரே இறைவன் ஆகும்! எனவே, இரட்சகரான உமது இறைவனை உமது, முழு மனத்துடனும் ஆன்மாவுடனும், உமது முழு சிந்தனையுடனும், மேலும் உமது முழு சக்தியுடனும் நீர் வழிபட வேண்டும்.
> டெட்ரானமி 6 : 4-5, லூக்கா 12 : 29-30, அல்குர் ஆன் 3: 18.

நாம் இறைவனை, அவருடைய மகத்தான தன்மைகளை துதிப்போம், அவரே இப்பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றுக்கும், படைத்தவர் என்ற முறையில் அடிப்படை ஆனவர், அவரே எல்லா இடங்களிலும் இருப்பவர், எல்லா வல்லமையும் உடையவர், எல்லாவற்றையும் அறிந்தவர் என்பதால் வணங்கப்படுவதற்குத் தகுதியானவர், மேலும் சுயமாக ஜீவித்திருப்பவரும், அறிந்திருப்பவரும் ஆவார், மேலும் நமது அறிவைத் தூய்மைப்படுத்தி, கூர்மைப்படுத்தி நம் மனங்களில் உள்ள அழுக்குகளையும், அறியாமையையும் நீக்குபவர்.

காயத்ரி மந்திரம் - யஜுர் வேதம்.

அனைத்து மதங்களும் புதுக்கண்டுபிடிப்புகளாலும், பாரம்பர்ய நடைமுறைகளாலும் பொய்யான இணைவைப்புக் கொள்கைகளாலும் பாழ்படுத்தப்பட்டிருக்கும் அதே சமயம் எல்லா மதங்களிலும் "அடிபணிந்தவர்கள்" இருக்கக் கூடும். கிறித்துவர்களாக, யூதர்களாக, முஸ்லிம்களாக, இந்துக்களாக, புத்தர்களாக அல்லது வேறு எந்த மதத்தையும் சேர்ந்தவர்களாக அடிபணிந்தோர் இருக்கக் கூடும்.

இத்தகைய அடிபணிந்தோர் அனைவரும் ஒன்று சேர்ந்து இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரே மதத்தின் அங்கத்தினர்கள் ஆவார்கள்.


இறைவனுக்கு எந்த இணைகளையும் அமைத்துக் கொள்ளாமல் இறைவனுக்கு மட்டுமே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அடிபணிந்தோர் அனைவரும் இறைவனின் நிரந்தர சாம்ராஜ்யத்திற்கு மீட்டு கொள்ளப் படுவார்கள். (2:62) உண்மையான அடிபணிந்தவர்களின் ஒரு இலக்கணம் என்ன வென்றால் அவர்கள் இறுதி இறை வேதமான குர் ஆனில் ஆட்சேபத்திற்குரிய எதையும் காணமாட்டார்கள்.

இந்த இறுதி வேதத்தின் வருகையுடன் இவ்வுலகிற்குரிய இறைவனின் செய்திகள் முற்றுப் பெற்று விட்டன. நீண்ட நாள் காத்திருக்கும் நமது மிக அவசரமான கேள்விகளான, நாம் யார், நமது வாழ்வின் நோக்கம் என்ன, நாம் எவ்வாறு இவ்வுலகிற்கு வந்தோம், இங்கிருந்து நாம் எங்கே செல்கிறோம், எது

சரியான மதம், படைப்பா, பரிணாம வளர்ச்சியா போன்ற வற்றிற்குரிய பதில்களை இப்போது நாம் பெற்றிருக்கிறோம்.

சிலர் வியக்கக் கூடும்: "தன்னுடைய செய்தியை முழுமைப் படுத்தவும், ஒன்றிணைக்கவும் இறைவன் ஏன் இத்தனை காலம் காத்திருக்க வேண்டும்? ஆதமுடைய காலம் முதல் உள்ள, முழுமையான வேதத்தைப் பெறாத, மக்களுடைய நிலை என்ன?" இக்கேள்விக்குக் குர்ஆன் 20:52ல் பதில் கூறுவதை மனதில் கொண்டு, உலகின் மக்கள் தொகை அதன் துவக்கம் முதல் இன்றுவரை 700 கோடியைத் தாண்டவில்லை என்பது ஒரு எளிய புள்ளிவிவரக் கணக்கு விஷயமே ஆகும்.

இப்போது முதல் கி.பி. 2280, உலக முடிவு வரை இவ்வுலகின் மக்கள் தொகை 7500 கோடியைத் தாண்டி விடும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மக்களில் பெரும்பான்மையினர் இறைவனின் தூய்மைப் படுத்தப்பட்ட ஒன்று இணைக்கப் பட்ட செய்தியைப் பெறுவார்கள் என்று விதிக்கப்பட்டுள்ளது. (வரைபடம் பார்க்க)




(கறுப்பு பகுதி ஆதத்திலிருந்து இன்று வரை உள்ள உலக மக்கள் தொகையினைக் காட்டுகிறது)

## படைப்பின் துவக்கத்திற்கு முன் BEFORE GENESIS

இவை அனைத்தும் கோடிக் கணக்கான ஆண்டுகட்கு முன்பு, இறைவனிடம் உயர்ந்த அந்தஸ்து உடைய ஒரு படைப்பான சாத்தான் தன்னாலும் ஒரு சாம்ராஜ்யத்தை இறைவனுடைய தொடர்பின்றி ஒரு சுயேச்சையான கடவுளாக நிர்வாகம் செய்ய முடியும் என்ற அகந்தை மிக்க எண்ணத்தைத் தன்னுள் வளாத்துக் கொண்டபோது நிகழ்ந்தது.

இறைவனின் பூரணமான அதிகாரத்திற்கெதிரான இந்த அறைகூவல் இறை நிந்தனையானது மட்டுமல்ல, அது தவறானதுமாகும்.

இறைவனுக்கு மட்டுமே கடவுளாயிருப்பதற்குரிய திறன் உள்ளது, மேலும் கடவுள் தன்மைஎன்பதுஅவன் புரிந்துகொண்டதை விடமிகவும் அதிகமானது என்ற உண்மையை அவன் அறியாதவனாக இருந்தான். அவனுடைய

அகந்தையே-அறியாமை கொண்டு தூபமிடப்பட்ட அகம் பாவமே சாத்தானுக்குக் தன்னாலும் ஒரு சாம்ராஜ்யத்தை, கடவுளைப் போல் நோய், துன்பம், போர், விபத்து, குழப்பம் ஆகியவை இல்லாமல் நிர்வாகம் செய்ய முடியும் என்று நம்புவதற்குக் காரணம் ஆனது. இறைவனின் படைப்புக்களில் மிகப் பெரும்பான்மையினர் சாத்தானுடன் இசையவில்லை. ஆயினும், சாத்தானுடன் ஒத்துப்போன மிகச் சிறிய சிறுபான்மையினரே கோடிக்கணக்கில் இருந்தனர். எனவே இறைவனின் சாம்ராஜ்யத்தில் உள்ள சமூகத்தாரிடம் ஒரு நீண்ட ஆழமான தர்க்கம் எழும்பியது. (38:69)


இறைவனின் பூரணமான அதிகாரத்திற்கெதிரான கலகக்காரர்களின் இந்த அநீதமிக்க அறைகூவல் மிகத் திறமையான முறையில் சந்திக்கப்பட்டு தீர்த்து வைக்கப்பட்டது.

தங்களுடைய குற்றத்திலிருந்து விலகி, இறைவனுக்கு அடிபணிவதற்குப் போதுமான சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டபின், கடுமதி கொண்ட கலகக் காரர்களை பூமி என்று அழைக்கப்படும் விண்கலத்திற்கு வெளியேற்றி, அவர்கள் தங்களை மீட்டுக் கொள்வதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் அளிக்க இறைவன் முடிவு செய்தார்.

உங்களுக்கு விமானம் ஓட்டத் தெரியுமென்று நீங்கள் கோரினால் உங்களுடைய கோரிக்கையைப் பரீட்சிக்கச் சிறந்த வழி, உங்களிடம் ஒரு விமானத்தைக் கொடுத்து அதை ஓட்டும்படிக் கூறுவதே ஆகும்.

தானும் ஒரு கடவுளாக இருக்க முடியும் என்ற சாத்தானின் கோரிக்கைக்குப் பதிலளிக்கும் முகமாக இறைவன் எடுத்த முடிவும் மிகச் சரியாக, இதுதான்; மிகச் சிறிய, துகளான பூமியில் அவனைத் தற்காலிகக் கடவுளாக இறைவன் நியமித்தார். (2:30, 36:60) சாத்தானுடன் ஒத்துப்போனவர்களைப் பொறுத்த வரை, அவர்களுடைய அகந்தையைக் கொன்று இறைவனின் பூரணமான அதிகாரத்திற்கு அடிபணிய ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

குற்றம் செய்த படைப்புக்களில் மிகப் பெரும்பான்மையானவை இச்சலுகையைப் பயன்படுத்திக் கொண்ட அதே சமயம் மிகச் சிறிய சிறுபான்மையினரான சுமார் 15000 கோடி படைப்புக்கள் இச்சலுகையைப் பயன் படுத்திக் கொள்ளத் தவறிவிட்டன. (33:72)




இறைவனுடைய சாம்ராஜ்யத்தில் உள்ள சமூகத்தினரின் இத்தர்க்கம் இறைவனின் படைப்புக்களை வெவ்வேறு இனங்களாக வகைப்படுத்த வழிகோலியது.

## 1. வானவர்கள்

(மலக்குகள்)

இறைவனுடைய பூரணமான அதிகாரத்திற்கெதிராக ஒருபோதும் கேள்வி கேட்காத படைப்புக்கள் வானவர்களாக வகைப்படுத்தப் பட்டனர். இறைவனுக்கு மட்டுமே கடவுளாக இருப்பதற்குரிய தகுதிகளும் திறமையும் உள்ளது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். இறைவனின் படைப்புக்களில் மிகப் பெரும்பான்மையினர் எண்ணில் அடங்காதவர்கள் - இவ்வகையைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். வானவர்களின் எண்ணிக்கை மிகவும் பெரியது, தங்களில் எத்தனை பேர் இருக்கிறோம் என்பதை வானவர்கள் கூட அறியமாட்டார்கள்.

அவர்களின் எண்ணிக்கையை இறைவன் மட்டுமே அறிவார். **(74:31)**

## 2. பிராணிகள் (மற்றும் அனைத்து படைப்பினங்களும்)

கலகக்காரர்களும் அவர்களுடைய தலைவனும் இறை சாம்ராஜ்யத்தில் இருந்து வேளியேற்றப் படவேண்டும் என்று வானவர்கள் ஆலோசனை கூறிய போதிலும் (2:30) மிக்க அருளாளர் கலகக்காரர்களுக்கு தங்கள் குற்றத்திலிருந்து விலகி, திருந்தி, இறைவனின் ஏகோபித்த, பூரணமான அதிகாரத்திற்கு அடிபணிய ஒரு சந்தர்ப்பம் அளிக்க விரும்பினார். (33:72) கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் உள்ளபடி கலகக்காரர்களில் மிகப் பெரும்பான்மையினர் இறைவனின் சாம்ராஜ்யத்தில் மீண்டும் நுழைவதற்கு இறைவனின் கருணை மிகுந்த இச்சலுகையைப் பயன் படுத்திக் கொண்டனர்.

தங்களுடைய இறை நிந்தனைக்குப் பரிகாரமாக அவர்கள் தங்கள் அகந்தையைக்கொல்லவும்,இவ்வுலகிற்கு வந்து அடிபணிந்த நிலையில்ஒரு

தொடர்ச்சி 27 பக்கம்...

**Sura 2: The Heifet (Al-Baqarah)**

**அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)**

مَنْ كَانَ عَدُوًّا لِّلّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَرُسُلِهٖ وَجِبْرِيْلَ وَمِيْكٰلَ فَاِنَّ اللّٰهَ عَدُوٌّ لِّلْكٰفِرِيْنَ

98. Anyone who opposes God, and His angels, and His messengers, and Gabriel and Michael, should know that God opposes the disbelievers

98. கடவுள்-ஐயும், அவருடைய வானவர்களையும், அவருடைய தூதர்களையும், மற்றும் கேப்ரியேலையும் மைக்கேலையும், எதிர்க்கின்ற எவரொருவரும், நம்ப மறுப்பவர்களை கடவுள் எதிர்க்கின்றார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

وَلَقَدْ اَنْزَلْنَآ اِلَيْكَ اٰيٰتٍ بَيِّنٰتٍ وَمَا يَكْفُرُ بِهَآ اِلَّا الْفٰسِقُوْنَ

99. We have sent down to you such clear revelations, and only the wicked will reject them.

99. இத்தகைய தெளிவான வெளிப்பாடுகளை உமக்கு நாம் இறக்கி அனுப்பியுள்ளோம், மேலும் தீயவர்கள் மட்டுமே இவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள்.

وَلَمَّا جَآءَهُمْ رَسُوْلٌ مِّنْ عِنْدِ اللّٰهِ مُصَدِّقٌ لِّمَا مَعَهُمْ نَبَذَ فَرِيْقٌ مِّنَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ ۙ كِتٰبَ اللّٰهِ وَرَآءَ ظُهُوْرِهِمْ كَاَنَّهُمْ لَا يَعْلَمُوْنَ

100. Is it not a fact that when they make a covenant and pledge to keep it, some of them always disregard it? In fact, most of them do not believe.

100. ஓர் உடன்படிக்கை செய்து அதனைப் பேணுவதாக அவர்கள் வாக்குறுதியளிக்கும் போதெல்லாம், அவர்களில் சிலர் எப்பொழுதும் அதனை அலட்சியம் செய்கின்றனர் என்பது ஓர் உண்மை நடப்பல்லவா? உண்மையில், அவர்களில் அதிகமானோர் நம்பிக்கை கொள்ளவில்லை.

وَلَمَّا جَآءَهُمْ رَسُوْلٌ مِّنْ عِنْدِ اللّٰهِ مُصَدِّقٌ لِّمَا مَعَهُمْ نَبَذَ فَرِيْقٌ مِّنَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ ۙ كِتٰبَ اللّٰهِ وَرَآءَ ظُهُوْرِهِمْ كَاَنَّهُمْ لَا يَعْلَمُوْنَ

*Disregarding God's Scripture*

101. Now that a messenger from God has come to them, and even though he proves and confirms their own scripture, some followers of the scripture (Jews, Christians, and Muslims) disregard God's scripture behind their backs, as if they never had any scripture.

**இறைவனின் வேதத்தைப் புறக்கணித்தல்;**

101. இப்போது கடவுள்-யிடமிருந்து ஒரு தூதர் அவர்களிடம் வந்திருப்பதால், மேலும் அவர்களுடைய சொந்த வேதத்தை அவர் நிரூபித்து உறுதிப்படுத்திய போதிலும், வேதத்தைப் பின்பற்றுபவர்களில் சிலர் (யூதர்கள், கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள்) எந்த வேதத்தையும் அவர்கள் ஒருபோதும் பெற்றிருந்திராதவர்களைப் போல, கடவுள்-ன் வேதத்தை அவர்களுடைய முதுகுகளுக்குப் பின்னால் அலட்சியம் செய்கின்றனர்.

وَاتَّبَعُوْا مَا تَتْلُوا الشَّيٰطِيْنُ عَلٰى مُلْكِ سُلَيْمٰنَ وَمَا كَفَرَ سُلَيْمٰنُ وَلٰكِنَّ الشَّيٰطِيْنَ كَفَرُوْا يُعَلِّمُوْنَ النَّاسَ السِّحْرَ وَمَآ اُنْزِلَ عَلَى الْمَلَكَيْنِ بِبَابِلَ هَارُوْتَ وَمَارُوْتَ وَمَا يُعَلِّمٰنِ مِنْ اَحَدٍ حَتّٰى يَقُوْلَا اِنَّمَا نَحْنُ فِتْنَةٌ فَلَا تَكْفُرْ فَيَتَعَلَّمُوْنَ مِنْهُمَا مَا يُفَرِّقُوْنَ بِهٖ بَيْنَ الْمَرْءِ وَزَوْجِهٖ وَمَا هُمْ بِضَآرِّيْنَ بِهٖ مِنْ اَحَدٍ اِلَّا بِاِذْنِ اللّٰهِ وَيَتَعَلَّمُوْنَ مَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ وَلَقَدْ عَلِمُوْا لَمَنِ اشْتَرٰىهُ مَا لَهٗ فِى الْاٰخِرَةِ مِنْ خَلَاقٍ وَلَبِئْسَ مَا شَرَوْا بِهٖ اَنْفُسَهُمْ لَوْ كَانُوْا يَعْلَمُوْنَ

*Witchcraft Condemned*

102. They pursued what the devils taught concerning Solomon's kingdom. Solomon, however, was not a disbeliever, but the devils were disbelievers. They taught the people sorcery, and that which was sent down through the two angels of Babel, Haroot and Maroot. These two did not divulge such knowledge without pointing out: "This is a test. You shall not abuse such knowledge." But the people used it in such evil schemes as the breaking up of marriages. They can

**மாந்ரீகம்-கண்டனம் செய்யப்படுகிறது.**

102. சாலமனின் சாம்ராஜ்யம் தொடர்பாக சாத்தான்கள் கற்றுக்கொடுத்தவற்றை அவர்கள் பின்தொடர்ந்தனர். ஆயினும், சாலமன் ஒரு நம்பமறுப்பவராக இருந்ததில்லை, ஆனால் சாத்தான்கள்தான் நம்பமறுப்பவர்களாக இருந்தனர். அவர்கள் மக்களுக்கு மாந்திரீகத்தையும், மேலும் பாபிலைச் சேர்ந்த இரு வானவர்களான ஹாரூத் மற்றும் மாரூத் மூலமாக இறக்கி அனுப்பப்பட்டவற்றையும் கற்றுக் கொடுத்தனர். இவர்கள் இருவரும் இத்தகைய அறிவை இவ்வாறு சுட்டிக் காட்டாமல் வெளிப்படுத்தவில்லை: இது ஒரு சோதனையாக உள்ளது. இத்தகைய அறிவை நீங்கள் துஷ்பிரயோகம் செய்யக்

never harm anyone against the will of God. They thus learn what hurts them, not what benefits them, and they know full well that whoever practices witchcraft will have no share in the Hereafter. Miserable indeed is what they sell their souls for, if they only knew.

கூடாது ஆனால் திருமணங்களை முறித்து விடுதல் போன்ற தீய சூழ்ச்சிகளில் மக்கள் அதனைப் பயன்படுத்தினர். கடவுள்-ன் நாட்டத்திற்கு எதிராக எவரொருவருக்கும் அவர்கள் ஒரு போதும் தீங்கிழைத்து விட இயலாது. இவ்விதமாக அவர்கள் தங்களுக்கு ஊறு விளைவிப்பதையே கற்றுக் கொள்கின் றனர், அவர்களுக்குப் பயனளிப்பதை அல்ல, மேலும் சூனியக்கலையைப் பயில்கின்ற எவருக்கும் மறுவுலகில் எந்தப் பங்கும் இருக்காது என்பதை அவர்கள் முற்றிலும் நன்கறிவர். எதற்காக அவர்கள் தங்களுடைய ஆத்மாக்களை விற்றுக் கொண்டனரோ அது உண்மையில் துக்ககரமானது, அவர்கள் மட்டும் அறிந்திருந்தால்!.

وَلَوْ اَنَّهُمْ اٰمَنُوْا وَاتَّقَوْا لَمَثُوْبَةٌ مِّنْ عِنْدِ اللّٰهِ خَيْرٌ لَوْ كَانُوْا يَعْلَمُوْنَ

103. If they believe and lead a righteous life, the reward from God is far better, if they only knew.

103.அவர்கள் நம்பிக்கை கொண்டு நன்னெறியான தொருவாழ்வு நடத்தினால், கடவுள்-யிடமிருந்துள்ள வெகுமதி மிகவும் மேலானதாகும், அவர்கள் மட்டும் அறிந்திருந்தால்.

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَقُوْلُوْا رَاعِنَا وَ قُوْلُوا انْظُرْنَا
وَاسْمَعُوْا وَلِلْكٰفِرِيْنَ عَذَابٌ اَلِيْمٌ

104. O you who believe, do not say, "Raa`ena" (be our shepherd). Instead, you should say, "Unzurna" (watch over us), and listen. The disbelievers have incurred a painful retribution.

104. நம்பிக்கையாளர்களே உங்களைத்தான்,ராஇனா* (எங்களுடைய மேய்ப்பராக இருப்பீராக) என்று கூறாதீர்கள். மாறாக, நீங்கள் உன்ஜுர்னா (எங்களைக் கண்காணிப்பீராக) என்று கூற வேண்டும், மேலும் கவனத்துடன் செவியேற்றுக் கொள்ளுங்கள். நம்ப மறுப்பவர்கள் வலிநிறைந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்

---

**Foot Notes :**

2:101. GOD's messenger of the covenant is prophesied in the old testament (Malachi 3 : 1-3), the new Testament (Luke 17 22-37) and this final Testament . (3: 81)

2:104 The word “Raa`ena” was abused by some Hebrew - speaking people, and twisted to sound like a dirty word (see also 4:46)

**அடிக்குறிப்புகள். :**

2:101. உடன்படிக்கை பெற்ற இறைவனின் தூதர், பழைய ஏற்பாடு (மலாக்கி 3:1-3) புதிய ஏற்பாடு (லூக்கா 17:22-37) மற்றும் இந்த இறுதி வேதம் (3 : 81) ஆகிய அனைத்திலும் முன்னறிவிக்கப் படுகிறார்.

2:104. **ராஇனா** என்ற வார்த்தை ஹீப்ரு மொழி பேசும் சிலரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு கெட்ட வார்த்தை போல் தொனிக்கும்படி செய்யப்பட்டது.
(மேலும் பார்க்க 4 : 46)

22 பக்கத்தின் தொடர்ச்சி..

பங்கை ஆற்றவும் ஒப்புக் கொண்டனர். இவ்வுலகில் அடிபணிந்த நிலையில் அவர்கள் ஆற்றிய பங்கிற்குப் பகரமாக, இப்படைப்புக்கள் இறைவனின் நிரந்தர சாம்ராஜ்த்திற்குள் மீட்டுக் கொள்ளப்படுவர் (6:38) குதிரை. நாய், மரம், சூரியன் நிலவு, நட்சத்திரங்கள், போன்றவை இன்னும் உருக்குலைந்த மற்றும் வளர்ச்சி குறைந்த குழந்தைகள் போன்றவை தங்கள் குற்றத்திலிருந்து விலகிக் கொண்டு திருந்தி விட்ட அறிவுடைய படைப்புக்கள் ஆகும்.

> வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒவ்வொன்றும் இறைவனுக்குச் சிரம் பணிகின்றன என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளவில்லையா; சூரியன், நிலவு, நட்சத்திரங்கள், மலைகள், மரங்கள், பிராணிகள் மற்றும் மனிதர்களில் பெரும்பாலோனோரும்? ஆயினும் மக்களில் அதிகமானோர் தண்டனைக்கு விதிக்கப்பட்டுள்ளனர். **(22:18)**
>
> நட்சத்திரங்களும் மேலும் மரங்களும் சிரம் பணிகின்றன. **(55:6)**

ஒரு குதிரைக்கு எந்த அகந்தையும் இல்லை. அக்குதிரையின் சொந்தக்காரர் பணக்காரராகவோ, அல்லது ஏழையாகவோ, உயரமாகவோ அல்லது குட்டையாகவோ, பருத்த வராகவோ அல்லது இளைத்தவராகவோ, இளமையானவராகவோ அல்லது முதிர்ந்தவராகவோ இருக்கலாம், அக்குதிரை அனைவருக்கும் பணிவிடை செய்யும். ஒரு நாய்க்கு எந்த அகந்தையும் இல்லை. சொந்தக்காரர் எவ்வளவு பெரிய பணக்காரராகவும் ஏழையாகவும் இருந்த போதிலும் அது தன் வாலை ஆட்டும்.

இறைவன் விதித்த நேரத்தில் சூரியன் மிகச் சரியாக ஒவ்வொரு நாளும் உதித்து மறையும். நிலவு அதே நேரத்தைக் காட்டும் தன் வட்டவரையில் சிறிதும் விலகாது பின் தொடர்கிறது. மனித உடல் - ஒரு தற்காலிக ஆடை - பூமியை சேர்ந்ததாகும். ஆகவே அவையும் அடிபணிந்தோராகும். இதயம், நுரையீரல், கல்லீரல், மற்ற உறுப்புக்கள் நம்முடைய கட்டுப்பாடின்றித் தங்களுடைய கடமையை நிறைவேற்றுகின்றன.

## 3. மானிடர்கள்

கடும் கலகக் காரர்கள் - மானுடர்கள் மற்றும் ஜின்கள் - தங்கள் குற்றத்திலிருந்து விலகிக் கொள்ள மறுத்து, சாத்தானின் கோரிக்கை செயல் படுத்தப்படுவதைக் காண வேண்டும் என்பதைக் தேர்ந்து கொண்டனர். இறைவனின் முழுமையான அதிகாரத்திற்கு அடிபணிய ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்ட போதும் ஏற்றுக் கொள்ளாத அகந்தை கொண்ட படைப்பினங்கள் சரிபாதியாக பிரிக்கப்பட்டனர்.

சாத்தானின் கண்ணோட்டத்தோடு குறைந்த அளவில் ஒத்துப்போன ஒரு பாதியினர் மானிடர்களாக வகைப்படுத்தப்பட்டனர். சாத்தானின் கோரிக்கையைப் பற்றிய சந்தேகங்களை அவர்கள் தாங்கி இருந்த போதிலும் இறைவனின் பூரணமான அதிகாரம் குறித்து ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுக்க அவர்கள் தவறி விட்டனர்.

அகந்தை ஒன்றே அவர்களை இறைவனின் மாபெரும் வல்லமையைப் பற்றிச் சரியான மதிப்பீடு செய்வதிலிருந்து தடுத்தது. அகந்தையே, அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதும், அடிபணிவதிலிருந்து அவர்களைத் தடுத்தது. **(33:72)** மேலும் அகந்தையே நம்மில் பெரும் பாலோருக்கும் இறைவனின் சாம்ராஜ்யத்திற்குள் நாம் மீட்டுக் கொள்ளப்படுவதற்கும் இடையில் நிற்கிறது **(25:43)** இதனால் தான் "உங்கள் அகந்தையைக் கொல்லுங்கள்" என்பது குர்ஆனில் காணப்படும் ஆரம்பக் கட்டளைகளில் ஒன்றாக உள்ளது. **(2:54)**

## 4. ஜின்கள் (மறைவினங்கள்)

குற்றம் செய்த படைப்புக்களில் மறுபாதி, சாத்தானின் கண்ணோட்டத்தோடு நெருங்கிச் சாய்ந்து மேலும் பெருங்கொண்ட அகந்தைகளை வெளிப் படுத்தியவர்கள், ஜின்களாக வகைப்படுத்தப்பட்டனர். ஒவ்வொரு மானுடனுக்கும் ஒரு ஜின்னானது பிறப்பு முதல் இறப்பு வரை நியமிக்கப்பட வேண்டும் என்பது இறைவனின் திட்டமாக இருந்தது. உடனிருக்கும் ஜின், சாத்தானின் பிரதிநிதியாக இருந்து தொடர்ந்து அவனுடைய கண்ணோட்டத்தை வளர்த்துக் கொள்ள ஊக்குவிக்கிறது. (50:23,27) மானுடர்களுக்கும் ஜின்களுக்கும் அவர்கள் மீண்டும் பாடங்கள் படித்துக் கொள்வதற்கும், தங்களுடைய அகந்தைகள் தீயவை என்று தெரிந்து விலகிக் கொள்வதற்கும் மேலும் இறைவனின் பூரணமான அதிகாரத்திற்கு அடிபணிந்து தங்களை மீட்டுக் கொள்வதற்கும் இவ்வுலகில் ஒரு அரிய சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒரு மானிடன் பிறக்கும் போதெல்லாம் ஒரு ஜின் பிறந்து, புதிதாய்ப் பிறந்த அம்மானுடனுக்கென நியமிக்கப்படுகிறது. ஜின்கள் சாத்தானின் சந்ததியினர் என்று நாம் குர்ஆனில் கற்றுக் கொள்கிறோம். (7:27,18:50)

ஒரு ஜின் பிறந்து ஒரு மானிடனுக்கென நியமிக்கப் படும்போது, அந்த ஜின் அம்மனிதனின் இறப்பு வரை அவனுடன் தொடர்ந்து கூடவே இருக்கிறது. பின்னர் அந்த ஜின் விடுதலை செய்யப்பட்டு தொடர்ந்து சில நூற்றாண்டுகள்

ஜீவித்திருக்கின்றது. ஜின்களும் மனிதர்களும் இறைவனை மட்டுமே வணங்க வேண்டும் என்பது தவிர்த்து விட முடியாத ஒன்றாக உள்ளது. (51:56)

## இறைவனுக்கு இயந்திர மனிதர்கள் தேவையில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட 38:69 வசனத்தில் கூறப்பட்டுள்ள படி இறை சாம்ராஜ்யத்தினரிடையே ஏற்பட்ட இத்தர்க்கம், இறைவனின் படைப்புக்களுக்கு தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் உள்ளது என்பதை நிரூபிக்கிறது. அவர்களுக்குச் சுயமான உள்ளங்கள் இருக்கின்றன.

இறைவனின் படைப்புக்கள் அவருக்குப் பணி செய்வது ஏனெனில் அவருடைய அளவில்லாச் சிறப்புகளையும் மகத்துவத்தையும் போற்றி நன்றி செலுத்துவதற்காகவே என்ற அற்புதமான உண்மையை இறைவனின் படைப்புக்களில் உள்ள மிகச் சிறிய சிறுபான்மையினரின் இக்கலகம் வலியுறுத்திக் காட்ட உதவி செய்கிறது. இக்கலகம் ஏற்பட்டிராவிட்டால், சுதந்திரம் என்பது இறைவனின் படைப்புக்களுக்கு அவருடைய பரிசு என்பதை நாம் ஒருபோதும் அறிந்திருக்க மாட்டோம்.

## மிக்க அருளாளர், மிக்க அன்பாளர்

நம் உலக நோக்கில் கூட, எந்த ஒரு நிறுவனமும் அதில் பணிபுரிபவர் அந்நிறுவனத்தின் நலனுக்கு நேர்மையானவராகவும், அர்ப்பணித்தவராகவும், இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. ஒரு நிறுவனத்தின் பணியாளர் அந்நிறுவனத்திற்குத் தன்னை முழுமையாகச் சமர்ப்பிக்காதவராகவோ, மற்றொருவருக்கு விசுவாசம் கொண்டவராகவோ தெரிய வந்தால் அவர் உடனடியாக நீக்கம் செய்யப் படுகிறார். ஜின்களும், மானிடர்களும் சாத்தானின் பால் சாய்ந்து, பின்னர் தங்களுடைய கலகக் காரியங்களை மறு பரிசீலனை செய்யுமாறு இறைவனால் அளிக்கப்பட்ட சந்தர்பத்தை நிராகரித்ததால் சாத்தானும் அவனுடைய தோழர்களும் இறை சாம்ராஜ்யத்தை விட்டு வெளியேற்றப்பட வேண்டும் என்று வானவர்கள் எதிர்பார்த்தனர். (2:30)

நம் குற்றத்திலிருந்து விலகி, நம்மை மீட்டுகொள்ள இறைவன் நமக்களித்த கூடுதலான இவ்வாய்ப்பு இறைவனிடமிருந்துள்ள மாபெரும் கருணையே ஆகும்.

மீட்சிக்கான, எல்லையில்லாக் கருணை மிகுந்த இத்திட்டத்தை நிறைவேற்ற இறைவன் மரணத்தைப் படைத்தார்' (67:1-2) இறைவனின் இத்திட்டப்படி இந்தத் தர்க்கத்தைப் பற்றிய நினைவு எதுவும் இல்லாத நிலையில்

(கலகக்காரர்களை) மற்றுமொரு வாழ்க்கைக்கு கொண்டு வரவேண்டி இருந்தது. இவ்வாழ்வின் சூழ்நிலைகளில் ஜின்களும், மனிதர்களும் இறைவனின் செய்திகளையும், சாத்தானின் செய்திகளையும் பெற்றுப் பின்னர் சுதந்திரமாக எந்தப் பக்கத்தையும் தேர்ந்தெடுக்கின்றனர்.

அவர்கள் சுயவிருப்பத்தின் படி செய்த முடிவின் அடிப்படையில் அவர்கள் இறைவனின் சாம்ராஜ்யத்திற்குள் மீட்டுக் கொள்ளப் படுகிறார்கள், அல்லது சாத்தானுடன் சேர்ந்து நிரந்தரமாக வெளியேற்றப் படுகிறார்கள்.

## சாத்தானின் தற்காலிகச் சாம்ராஜ்யம்

சாத்தானுக்காகத் திட்டமிடப்பட்ட சாம்ராஜ்யத்தின் அற்பத்தை வலியுறுத்துவதற்காக இறைவன் கோடிக்கணக்கான நட்சத்திரக் குடும்பங்களை, கோடானு கோடிக்கணக்கான ஒளி வருடங்களின் தூர அளவு விரிந்திருக்கும் இப்பிரபஞ்சத்திற்குள் படைத்தார். ஒளியின் வேகத்தில் சூரியனை நோக்கி (93,000,000 மைல்கள்) நாம் பயணித்தால் நாம் அதை எட்டு நிமிடத்தில் அடைவோம். நாம் ஒளி வேகத்தில் தொடர்ந்து சென்றால் 50,000-70,000 வருடங்களில் நம்முடைய பால் வீதியின் எல்லையை அடைவோம். பால்வீதிக்கு அருகில் உள்ள நட்சத்திரக் குடும்பத்தை நாம் அடைவதற்கு ஒளியின் வேகத்தில் 2,000,000 வருடங்கள் ஆகும்.

மேலும் நம்முடைய பிரபஞ்சத்தில் குறைந்த பட்சம் 2000 கோடி நட்சத்திரக் குடும்பங்கள் உள்ளன. இப்பிரபஞ்சத்தின் எல்லையை விட்டுவிடுவோம். நம்முடைய பால்வீதியின் எல்லையில் இருந்து மிக மிகச் சக்தி வாய்ந்த தொலை நோக்கியால் பார்த்தால் கூட நம்முடைய பூமி நம் பார்வைக்கு எட்டாது. இப்பிரபஞ்சம் ஒன்றும் பெரியதல்ல என்பது போல், இதைச் சூழ்ந்து இதைவிடப் பெரிய ஆறு பிரபஞ்சங்களை இறைவன் படைத்தார்.

பின்னர் மிகச் சிறியதும், உள்ளடங்கியதுமாக உள்ள இப்பிரபஞ்சத்தில் இருக்கும் மிகச் சிறிய துகளான பூமி என்ற கிரகம் அவனுடைய சாம்ராஜ்யமாக இருக்கும் என்று இறைவன் சாத்தானுக்குத் தெரிவித்தார். இறைவனின் திட்டப்படி, மனிதர்களையும், ஜின்களையும் இறைவனின் நேரடி இருப்பைத் தாங்க முடியாத ஒரு பிரபஞ்சத்தில் அமைக்க வேண்டி இருந்தது. **(7:143)**

இவ்விதம், இறைவனின் நேரடி இருப்பிலிருந்து மிகத் தூரமாக, ஆயினும் அவருடைய முழு அறிதலும், கட்டுப்பாடும் உள்ள மிகச் சிறிய சாம்ராஜ்யத்தைச் சாத்தான் ஆட்சி செய்கின்றான்.

பூமியில் அனைவரையும் அமர்த்த அது போதுமானதாக இல்லாத அளவுக்கு, திருந்திவிட்ட கலகக் காரர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது என்பது கவனிக்கப் பட வேண்டியதாகும்.

ஆகவேதான் பூமிக் கிரகத்தில் மனிதர்களை விட மிக அதிகமான எண்ணிக்கையில் பிராணிகள் இருக்கின்றன.

திருந்திவிட்ட கலகக்காரர்கள் அனைவரையும் பூமியில் அமர்த்தினால் கொள்ளாமல் போய்விடும் என்பதனால் எண்ணவே முடியாத அளவு படைப்புக்கள் பூமிக்கு வெளியே விண்ணில் அமைக்கப்பட்டு உள்ளன.

## ஆதம் மற்றும் ஏவாள்

இறைவனுடைய கட்டளைகளின் படி முதல் மனிதரின் உடல் பூமியில் இறைவனின் வானவர்களால் வடிவமைக்கப்பட்டது. (7:11)

பின்னர் இறைவன் முதல் மனிதர் ஆதமை அவ்வுடலுக்கென நியமித்தார். பரீட்சைக் காலம் முழுவதும் அவர்கள் மானிடர்களுக்கு - பாதுகாத்தல், காற்றுக்களை வீசச் செய்தல், மழையையும் உணவு வகைகளையும் பங்கிடுதல் -முதலிய சேவகம் செய்வார்கள் என்று தெரிவித்த போது சாத்தான் ஒருவன் மட்டுமே “சிரம் பணிய” மறுத்தவனாக இருந்தான். ஆதமுடைய இணை, ஆதமிலிருந்து, பெண்ணின் தன்மையுடன் க்ளோன் செய்யப்பட்டு இறைவன் இரண்டாவது மானுடனை அவள் உடம்புக்கென நியமித்தார்.

ஆதம் மற்றும் ஏவாள் ஆகியோருடைய (ஆன்மா இல்லாத) வெற்று உடம்புகள் பூமியில் இருந்த அதே சமயம் அவர்களுடைய ஆன்மாக்கள், உண்மையான ஆதம், ஏவாள், சுவர்க்கத்தில் வசித்தார்கள்.

இறைவனின் கட்டளைகளை ஏற்று நடந்த வரை ஆதம், ஏவாள் ஆகியோர் 6 வனத்தில் தங்கி இருந்தனர். மாறாக அவர்கள் சாத்தானுக்குச் செவி சாய்த்த உடன், நம் அனைவரிடமும் உள்ள தவறான மனித இயல்பை அவர்கள் பிரதிபலித்தனர்.

மேலும் அவர்கள் உடனடியாக கீழே, பூமியில் உள்ள சாத்தானின் சாம்ராஜ்யத்தைச் சார்ந்தவர்களாகி விட்டனர். - “அவர்களுடைய உடம்புகள் அவர்களுடைய பார்வைக்குத் தென்பட்டன " (7:20, 20:121). பின்னர் நடந்தவை, சரித்திரம்.

## சாத்தான் அனைத்து ஜின்களுடைய தந்தை

மனிதர்களையும் ஜின்களையும் பரீட்சைக்கு உட்படுத்தியதால் ஒவ்வொரு மனிதன் பிறக்கும் போதும் சாத்தான் ஒரு சந்ததி எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

பிறப்பு முதல் இறப்புவரை ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய அதே உடம்பில் வாழும் சாத்தானின் பிரதிநிதியால் ஏற்படும் இடைவிடாது தொடரும் தூண்டுதல்களுக்கும் ஆலோசனைகளுக்கும் கவர்ச்சியான, இனிமையான பேச்சுக்கும் ஆட்படுத்தப்படுகிறான். சாத்தானின் பிரதிநிதி தன்னுடைய மானுடக் கூட்டாளியை இறைவன் மட்டும் போதுமானவர் அல்ல என்ற சாத்தானின் கண்ணோட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு திருப்தி செய்ய முயற்சிக்கின்றது;

தீர்ப்பு நாளில் ஜின் கூட்டாளி தன்னுடன் இருந்த மனிதனுக்கு எதிரான சாட்சியாகப் பணிசெய்யும் (43:38, 50:23,27) பற்பல ஜின் கூட்டாளிகள் தன்னுடன் இருக்கும் மனிதர்களால் இறைவனின் கண்ணோட்டத்திற்கு மாற்றப் படுகிறார்கள். சரியான தயாரிப்புக்களில்லாமல் இறைவன் மனிதனை விட்டு விட வில்லை. மனிதர்கள் தங்களுடைய கடைசி வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு, தங்களுடைய இறை நிந்தனையை மறுபரிசீலனை செய்ய உதவியாக ஒவ்வொரு மனிதனும் இறைவன் மட்டுமே நமது இரட்சகரும் தலைவரும் ஆவார், அவரைத் தவிர வேறு யாருமில்லை என்ற உள்ளுணர்வின் அறிவோடு பிறக்கின்றான்.

ஜின்களுக்கு இந்த உள்ளுணர்வின் அறிவு கொடுக்கப்படவில்லை. ஆனால் அவர்கள் உள்ளடங்கிய இப்பிரபஞ்சம் முழுவதும் நிறைந்துள்ள இறைவனின் அத்தாட்சிகளைக் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாக மனிதனை விட நீண்ட கால வாழ்வும், பெரும் திறன்களும் கொடுக்கப் பட்டுள்ளனர். அவர்கள் சாத்தானின் கண்ணோட்டத்திற்குப் பிரதிநிதியாக இருப்பதால் அவர்களுடைய

உள்ளுணர்வின் இயல்பு பலதெய்வக் கொள்கையின் பால் சாய்ந்ததாக உள்ளது. இறைவன் மட்டுமே வணங்கப்பட வேண்டுமென்ற நமது உள்ளுணர்விற்கு மேலாக, நாம் நம்மை மீட்டுக் கொள்ள உதவியாக இறைவன் தன் தூதர்களை அனுப்புகிறார். இவ்விஷயங்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டால் மன்னிக்கப் படாத ஒரே பாவம், (மரணிக்கும் வரை செய்யும்) இணை வைப்பு (இறைவனுடன் மற்றவர்களும் சுயமாக ஏதேனும் சக்திகள் கொண்டிருப்பதாக நம்புவது) என்ற அரிய உண்மையை நாம் போற்றி இறைவனுக்கு நன்றி செலுத்த முடியும்.

## நாற்பது வயது சலுகைக் காலம்.

சாத்தானின் கண்ணோட்டத்தையா அல்லது இறைவனின் பூரணமான அதிகாரத்தையா, எதை ஏற்றுக் கொள்வது என்ற மிக முக்கியமான முடிவை எடுப்பதற்கு முன் கற்றுக் கொள்ளவும், சுற்றிவர பார்க்கவும், சிந்தனை செய்யவும் அனைத்துக் கண்ணோட்டங்களையும் பரிசீலிப்பதற்காகவும் மானிடர்களுக்கு நாற்பது வருடங்கள் கொடுக்கப் பட்டுள்ளது. இறைவன் மட்டுமே அறிந்த காரணங்களுக்காக, நாற்பது வயதுக்கு முன்னர் மரணிக்கும் எந்த ஒருவரும் இறைவனால் மீட்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். நாற்பது வயதுக்கு முன்னர் மரணிக்கும் எந்த ஒருவரும் சுவனத்திற்குச் செல்கிறார். **(46:15)**

குர்ஆனை நம்புகிறவர்கள் கூட இத்தகைய கருணை மிக்க இறைச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள கடினமாகக் காணுகிறார்கள் என்ற உண்மையின் மூலம் இறைவனின் அளவிலாக் கருணை தெளிவாக புலப்படுகிறது.

நம்மை நாம் மீட்டுக் கொள்ள இறைவன் கொடுத்த வாய்ப்பைப் பற்றிய நற்செய்தியை இறைவனின் தூதர்கள் சேர்ப்பித்தார்கள், மேலும் அவர்கள் வலிமையான ஆதாரங்களால் உதவி செய்து வலுவூட்டப்படுகிறார்கள். மூஸா ஃபிர்அவ்னிடம் சென்ற போது அவருடைய கைத்தடி பாம்பாக மாறியது போன்ற அற்புதங்களைக் கொண்டு வலுவூட்டப்பட்டார். (ஜீஸஸ்) ஈசா இறைவனின் அனுமதியோடு களிமண்ணால் உயிருள்ள பறவையைப் படைத்தார், குஷ்டரோகிகளையும், குருடர்களையும் இறைவனின் அனுமதியோடு குணமளித்தார். மேலும் இறைவனின் அனுமதியோடு மரணித்தவர்களை உயிர்ப்பித்தார். இறுதி வேதமான அல்குர் ஆனைச் சேர்ப்பித்த இறைத்தூதரான

முஹம்மத் நபி இத்தகைய அற்புதங்கள் எதையும் வெளிப்படுத்தவில்லை. (10:20)

குர்ஆன்தான் முஹம்மது நபியின் தூதத்துவத்திற்கு வலுவூட்டும் அற்புதமாக அமைந்தது. (29:50-51)

குர்ஆனின் அற்புதத்திலிருந்து (19 என்ற எண்ணின் அடிப்படையிலான மாபெரும் அற்புதக் கணிதக் கட்டமைப்பு) முஹம்மத் நபியைப் பதினான்கு நூற்றாண்டுகள் தள்ளி, பிரித்து வைத்தது இறைவனின் ஞானமே ஆகும்.

இப்போது நாம் குர் ஆனின் அற்புதக் கட்டமைப்பு குறித்த மிகப்பெரும் முக்கியத்துவம் வாய்ந்த பற்பல பரிமானங்களை நாம் புரிந்து கொண்டிருப்பதால், இவ்வற்புதம் முஹம்மத் நபி மூலம் வெளிப்படுத்தப் பட்டிருந்தால் முஹம்மத் நபியை இறைவனின் அவதாரம் என்று வணங்கி இருப்பார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம்.

## அதிகார பூர்வமான ஆதாரம் :

**கண்கூடானவை, தொட்டறியக் கூடியவை, மறுக்க முடியாதவை.**

கம்ப்யூட்டர் யுகத்தின் வருகை நிகழ்ந்த போது, குர்ஆனில் உள்ள அற்புதக் கணிதக் கட்டமைப்பு 74:30-35ல் குறிப்பிட்டுள்ளபடி மாபெரும் அற்புதங்களில் ஒன்று எனத் திகழ்வதை நாம் கண்டு பிடித்திருக்கின்றோம்.

முந்திய தூதர்களுக்குக் கொடுக்கப் பட்ட அற்புதங்கள் காலம் மற்றும் இடம் ஆகிய வரையறைகளுக்கு உட் பட்டவையாக இருந்தன, ஆனால் குர்ஆனுடைய அற்புதம் சாஸ்வதமாக நிரந்தரமானதாக அமைந்துள்ளது. (மோஸஸ்)மூஸா (ஜீசஸ்) ஈசா ஆகியோரின் அற்புதங்களை அந்த இடத்தில் அந்த நேரத்தில் இருந்த சிலர் மட்டுமே காணமுடிந்தது. ஆனால் குர்ஆனின் அற்புதத்தை எந்த நேரத்திலும், எந்த ஒருவரும் கண்டு களிக்க முடியும்.

இன்னும் அதிகமாக, குர்ஆனின் அற்புதம் முந்திய அற்புதங்கள் அனைத்துக்கும் ஆவணமாகவும், அவற்றை நிரூபிப்பதாகவும் திகழ்கிறது. (5:48)

இக்கட்டமைப்பு குறித்த அற்புதத் தகவல்களை நமது இதழில் இறைவனின் முத்திரை 19 என்ற தகவல் பக்கங்களில் கண்டு வருகிறோம்.

## பரிபூரண மகிழ்ச்சி

**ஒ**வ்வொரு மனிதனுக்கும் கைக்கெட்டாமல் விலகி ஓடும் குறிக்கோள்களில் ஒன்று நிலையான மகிழ்ச்சி. இவ்வுலகிலும் மறுவுலகிலும் பரிபூரண மகிழ்ச்சியின் இரகசியத்தைக் குர்ஆன் நமக்கு வெளிப்படுத்துகிறது. மகிழ்ச்சி என்பது ஆன்மாவின் தனித்தன்மை வாய்ந்த ஒரு நிலையாகும் என்று குர்ஆன் நமக்குக் கற்பிக்கிறது. எனவே செல்வம், அதிகாரம், புகழ் என, தான் விரும்பும் உலக வெற்றிகள் அனைத்தும் அடைந்து விட்ட உடல்கள் பலவும் மகிழ்ச்சியற்ற மனிதர்களுக்குரிய தாகவே இருக்கின்றது. மகிழ்ச்சி என்பது முழுக்க முழுக்க ஆன்மாவுடைய - உண்மையான மனிதருடைய - முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியின் அளவைப் பொறுத்தது ஆகும். இவ்வுலகம் மற்றும் நிரந்தரமான மறுமை ஆகிய இரண்டிலும், பூரண மகிழ்சியை நோக்கி ஒரு விரிவான வரை படத்தைக் குர்ஆன் வழங்குகிறது.

நிரூபிக்கப்பட்ட இறுதி இறைவேதமான அல்குர்ஆனின் ஏராளமான வசனங்களில் கடவுள், நம்பிக்கையாளர்களுக்கு இன்றும் என்றும் மகிழ்ச்சியை தனிப்பட்ட முறையில் வாக்களிக்கிறார்.

**"உறுதியாக, இறைவனின் நேசர்கள் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை, அவர்கள் கவலை கொள்ளவும் மாட்டார்கள். அவர்கள் யாரென்றால் நம்பிக்கை கொண்டு மேலும் நல் வாழ்வு நடத்துபவர்கள். அவர்களுக்கு மகிழ்ச்சி இந்த உலகிலும் மறு உலகிலும். இறைவனின் மாற்ற முடியாத சட்டங்கள் இவ்வாறே. இதுவே உண்மையான வெற்றி." (10:62-24)**

இப்றாஹீம் இறைவனிடம் பிரார்த்தித்த போது, (14:40) அவர் செல்வத்தையோ உடல் நலத்தையோ கேட்கவில்லை. அவர் இறைஞ்சிக் கேட்ட அருட் கொடை என்ன வென்றால் : "எங்கள் இரட்சகரே தொடர்புத் தொழுகையை (ஸலாத்) கடைப்பிடிப்பவர்களில் ஒருவனாக என்னையும் என் சந்ததியினரையும் ஆக்குவாயாக" என்பதே ஆகும். இறைவனால் நிறுவப்பட்ட மார்க்கக் கிரியைகள் உண்மையில் அவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற ஒரு பரிசே ஆகும். அவை நம் ஆன்மாவின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தேவையான ஊட்டமாக அமைகின்றன. இத்தகைய ஒரு ஊட்டமில்லாமல் தீர்ப்பு நாள் அன்று இறைவனின் நேரடி இருப்புடன் இணைந்திருக்கும் மகத்தான சக்தியைத் தாங்கிக் கொண்டு தொடர்ந்து நம்மால் உயிர் வாழ முடியாது. இறைவன் மேல் நம்பிக்கை கொள்வது மட்டுமே நம்முடைய மீட்சிக்கு உத்திரவாதம் அளித்து விடாது. நாம் நம்முடைய ஆன்மாக்களையும் ஊட்டப்படுத்திக் கொள்ள வேண்டும். (6:158, 10:90-92). மேலும், இறைவனால் நிறுவப்பட்ட மார்க்கக் கடமைகளை கடைப்பிடிப்பது நாம் உறுதியை அடைவதற்குரிய வழிமுறையாகும் என்று 15:99 கூறுகிறது. "உறுதியை அடை வதற்காக உங்கள் இறைவனை வணங்குங்கள்."

## தொழுகையின் கண்கூடான பலன்கள்

தொடர்புத் தொழுகை, கடமையான தர்மம், ரமலான் நோன்பு, ஹஜ் ஆகியவற்றை கடைப்பிடிப்பது விலை மதிப்பற்ற ஆன்மீகப் பலன்களை நமக்கு அளிப்பதோடு மட்டுமல்லாமல் அவற்றில் அளவுக்கு அதிமான கண்கூடான, பொருளாதார மற்றும் உடல் நலப் பயன்களும் உள்ளன.

விடியற்காலைத் தொழுகையைக் கடைப்பிடிப்பது, தூக்கத்தின் போது நீண்ட நேரம் அசைவற்றிருப்பதைத் தடுக்கின்றது; இது மூட்டு வலியைத் தடுக்க உதவி செய்கிறது என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் காலையில் சீக்கிரமாக எழுவது மன அழுத்தம், மற்றும் அது போன்ற மற்ற மனநலக் கோளாறுகளை எதிர்த்துப் போராட உதவி செய்கிறது. . தொடர்புத் தொழுகையின் போது திரும்பத் திரும்பச் செய்யப்படும் சிரம் பணிந்த நிலையில் மூளைக்குச் செல்லும். இரத்தக் குழாய்கள் விரிவடைந்து அதிக இரத்தத்தைக் கொண்டு செல்கிறது, இது தலைவலிகளைத் தடுக்கிறது. திரும்பத் திரும்ப முதுகுகளையும் மூட்டுக்களையும் வளைப்பது ஒரு ஆரோக்கியமான உடற்பயிற்சி ஆகும். இவை அனைத்தும் விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மைகள் ஆகும்.

தொடர்புத் தொழுகைக்கு முன்னர் செய்யப்படும் 'ஒளு' எனும் அங்க சுத்தி நாம் கழிப்பிடத்தை அடிக்கடி உபயோகிப்பதை ஊக்குவிக்கிறது. மேலும் இப்பழக்கம், அதிகமாகக் காணப்படுகின்ற அழிவைத் தரும் புற்று நோயான பெருங்குடல் புற்று நோயிலிருந்து நம்மைப் பாது காக்கிறது. உடலுக்குத் தீங்கு தரும் இரசாயனங்கள் நாம் மல, ஜலம் கழிக்கும் போது வெளியேறுகின்றன. இக்கழிவுகள் நீண்ட நேரம் குடலில் இருந்தால் அவை உடல் உறுப்புக்களால் மறுபடியும் உறிஞ்சப்பட்டு புற்று நோய்க்குக் காரணமாகிறது.

ரமலான் மாதத்தில் நோன்பு இருப்பது விரிந்து விட்ட நமது வயிறுகளை அவற்றின் இயல்பான நிலைக்கு மீட்கிறது, தற்காலிகமாக உடலிலிருந்து நீரை அகற்றுவதன் மூலம் இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது, தீங்கு தரும் இரசாயன விஷங்களை உடலில் இருந்து நீக்குகிறது. நம்முடைய சிறு நீரகங்களுக்கு அவற்றுக்குத் தேவையான ஓய்வை அளிக்கிறது, மேலும் தீங்கிழைக்கக் கூடிய அதிகப்படியான கொழுப்பை நீக்கி நம்முடைய உடல் எடையைக் குறைக்கின்றது.

**கடமையான தர்மம் மற்றும் ஹஜ்யாத்திரை** ஆகியவை நீண்ட கால, விரிவான சமூக மற்றும் பொருளாதார பலன்களைத் தருவதாக உள்ளது.

●○●

## முக்கியத்துவம் வாய்ந்த

# முடிவெடுக்கும் வயது 40

மெய்ப்பிக்கும் தூதர் Dr. ரஷாத் கலீஃபா

பொறுப்பு ஏற்படும் வயது என்ன? ஒரு குழந்தை இறைவனைப் பற்றிச் சற்றும் அறியாத, கேள்விப்படாத நிலையில், 12 வயதில், மரணம் அடைந்தால், அக்குழந்தை சொர்க்கம் செல்லுமா, நரகம் செல்லுமா? அல்லது அக்குழந்தை 15 வயதிலோ, அல்லது 21 வயதிலோ மரணமடைந்தால்? எத்தனை வயதில் மானிடர்கள், அவனோ, அல்லது அவளோ, தங்களுடைய நம்பிக்கைகளுக்குப் பொறுப்பாகிறார்கள்?

இக்கேள்வி அனைத்து மதங்களைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களுக்கும் நீண்ட காலமாக ஒரு புரியாத புதிராகவே இருந்து வந்தது.

பொறுப்பு ஏற்படும் வயது 40 என்று குர்ஆன் புதிரை விடுவித்துத் தீர்ப்பளிக்கின்றது. நாற்பது வயதுக்கு முன்னர் மரணிக்கும் எந்த ஒருவரும் சொர்க்கம் செல்கிறார்கள் (46:15,16)

அந்த மானுடன் இறைவன் மேல் நம்பிக்கை கொண்டு, மேலும் அந்த நம்பிக்கையின் மூலம் தன் ஆத்மாவை ஊட்டப்படுத்தி வளர்த்துப் பயன் அடைந்தவனாக இருந்தால், அவனோ அல்லது அவளோ, மேலான சொர்க்கம் செல்கிறார்கள். இல்லையென்றால் அம்மானுடர்கள் தாழ்ந்த சொர்க்கம் செல்கின்றார்கள்.

இந்த ஒரு பகுதி தகவலைக் கேட்டதும், நீங்கள் உடனே வெளிப்படுத்துவது உங்கள் ஆட்சேபத்தைத்தான் : “அம்மானுடன் உண்மையில் கெட்டவனாகவும், தீயவனாகவும், நாத்திகனாகவும் இருந்தாலும், நாற்பது வயதுக்கு முன் மரணித்தால் அவனும் சொர்க்கம் செல்வானா? “இது ஏனெனில் நீங்கள் மிகவும் கஞ்சர்களாகவும் அற்பர்களாகவும் இருப்பதால்தான், அதே சமயம் இறைவனோ மிக்க அருளுடையவராக இருக்கின்றார். நம்முடைய மனோபாவம் “அவர்கள் அனைவரையும் நரகில் போட வேண்டும்” என்பதே.

இறைவனின் இந்தக் கருணையைக் கடுமையாக ஆட்சேபிக்கும் மக்களால் ஒரு நிர்ணயமான பொறுப்பு ஏற்படும் வயதைக் கூற முடிவதில்லை. அவர்கள் "உண்மையில் அந்த மனிதன் கெட்டவனாக இருந்தால்?" என்பது போன்ற கேள்விகளைக் கேட்கின்றார்கள். அதற்கு விடையாவது, "அந்த மனிதன் கெட்டவனாக இருந்தான் என்பது இறைவனுக்குத் தெரியுமல்லவா?" "ஆம்". "இந்த மனிதன் சொர்க்கத்திற்குத் தகுதியற்றவன் என்பது இறைவனுக்குத் தெரியுமல்லவா?" "ஆமாம்" "எனவே இம்மனிதன் நாற்பது வயதுக்கு முன்னர் மரணிக்க மாட்டான்" அதைப் போன்ற அளவு எளிமைதான். பூமியில் நமது வாழ்வை முடிவுக்குக் கொண்டு வருபவர் இறைவன் ஒருவர்தான்.

யார் சொர்க்கத்திற்கு தகுதியானவர்கள் என்றும் யார் நரகத்திற்குத் தகுதியானவர் என்றும் இறைவன் மிகச் சரியாக அறிந்திருக்கின்றார்.

சமீபத்தில் 1989ல் அமெரிக்காவில் தியோடர் ராபர்ட் பென்டி - Theodore Robert Bundy என்ற மனிதன் பல பெண்களைக் கொலை செய்ததற்காக மரண தண்டனை அளிக்கப்பட்டான். சரித்திரத்திலேயே மிகக் கொடூரமான குற்றவாளி அவன் என்பதை அமெரிக்க தேசம் முழுவதும் ஏற்றுக் கொண்டது. எந்த அளவுக்கென்றால் வழமையாக மரணதண்டைனையை எதிர்த்துக் குரல் எழுப்புபவர்கள் கூட இவனுடைய மரண தண்டனையை எதிர்த்துக் குரல் கொடுக்கவில்லை. மாறாக பலரும் அவன் தண்டனை நிறைவேற்றப்பட்டதைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

பென்டியை தண்டிக்க நீதி மன்றம் பதினோரு வருடங்கள் எடுத்துக் கொண்டதை பற்பல எழுத்தாளர்களும், தலையங்கங்கள் எழுதுபவர்களும், அரசியல்வாதிகளும் குறை கூறினர். அவர்கள் அதிக பட்சமாக கைது செய்யப்பட்ட ஆறு வருடங்களுக்குள் விசாரணையை முடித்து பென்டியின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் என்று கூறினர். குர்ஆனின் அடிப்படையில், அவ்வாறு பென்டிக்கு நடந்திருந்தால் அது அவனுக்குச் செய்யப்பட்ட மாபெரும் உபகாரமாகவே முடிந்திருக்கும்.

அவனுடைய மரணதண்டனை நிறைவேற்றப்பட்டபோது அவன் வயது 42. ஐந்து வருடங்கள் முன்னதாகவே அவனுடைய 37 வயதில் மரண தண்டனை நிறைவேற்றப் பட்டிருந்தால் அவன் நேரடியாகச் சொர்க்கம் சென்றிருப்பான், ஆனால் அவன் அதற்குத் தகுதியானவனல்ல.

இன்னொரு விதத்தில் 40 வயதுக்கு முன்னர் மரணிப்பவர்கள் சொர்க்கம் செல்வார்கள் என்பதற்கு ஆதாரமாக இறைவன் அளித்த அத்தாட்சிகளில்

ஒன்றாக பென்டியின் சம்பவம் அமைகின்றது. பென்டியின் பெயர் ஆங்கிலத்தில் 19 எழுத்துக்கள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அவனுடைய தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு ஒரே ஒரு நாள் முன்னர் தான் 19 பெண்களைக் கொன்றதாக ஒப்புக் கொண்டு இருக்கிறான். இறைவனிடமிருந்து வேறு பல அடையாளங்களும் வந்திருந்தன.

முக்கியமான இப்பகுதித் தகவலைச் சேர்ப்பிப்பது மெய்ப்பிக்கும் தூதர் உடன்படிக்கை கொண்ட தூதர் என்ற அடிப்படையில் இறைவன் எனக்கு வழங்கிய பொறுப்புக்களில் ஒன்றாகும். இது என் தனிப்பட்ட கருத்தல்ல.

மார்ட்டின் லூத்தர் கிங் மற்றும் மால்கம் **X** ஆகிய இரு நல்லவர்களும் தங்களுடைய 40வது பிறந்த நாளுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் கொல்லப்பட்டார்கள் என்பது கவனிக்கத்தக்கது. ❋ ❋ ❋

46 : 15

**தன்னுடைய பெற்றோர்களுக்குக் கண்ணியம் அளிக்க வேண்டும் என்று மனிதர்களுக்கு நாம் கட்டளையிட்டோம். அவன் தாய் அவனைச் சிரமத்துடன் சுமந்தாள், சிரமத்துடன் அவனை ஈன்றெடுத்தாள். மேலும் முப்பது மாதங்களுக்கு அவன் மேல் நெருங்கிய கவனம் எடுத்துக் கொண்டாள். மேலும் அவன் நாற்பது வயதை அடைந்து முதிர்ச்சி அடையும் போது அவன் கூற வேண்டும், “என் இரட்சகரே, என்மீதும் என் பெற்றோர் மீதும் நீர் பொழிந்த அருட்கொடைக்கு நன்றி செய்யும்படியும், மேலும் நீர் விரும்பக்கூடிய நற்காரியங்களை செய்வதற்கும் எனக்கு வழிகாட்டுவீராக. என்னுடைய குழந்தைகளையும் நல்லோராய் இருக்கச் செய்வீராக. நான் உம்பால் மீண்டேன்; நான் ஒரு அடிபணிந்தவன்.**

46 ; 16

**இவர்களிடம் இருந்துதான் நாம் நற்செயல்களை ஏற்றுக் கொள்கிறோம், மேலும் அவர்களுடைய பாவங்களை பொருட்படுத்தாது விட்டு விடுகிறோம். இவர்கள் சுவனத்திற்கு தகுதியானவர்கள். இது, அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் ஒரு உண்மையான வாக்குறுதி ஆகும்.**

# விதி

**இறைவனின் மெய்ப்பிக்கும் தூதர் Dr. ரஷாத் கலீஃபா எழுதிய குர்ஆன் மொழிபெயர்ப்பின் (ஆங்கிலம்) பின் இணைப்பு 14லிருந்து மொழிபெயர்க்கப்பட்டது**

இறைவனை நம்புவதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ நமக்கு முழு சுதந்திரம் உள்ளது. இறைவனின் நாட்டம் நாம் எதை வேண்டுமானாலும் நாடலாம் என்பதே. (18:29, 25:27, 73:19, 74:37,76:29,78:39, 80:12)

நாம் நம்முடைய ஆதிபாவத்தைச் செய்த பிறகு, நம்முடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு அதிலிருந்து விலகி இறைவனின் ஏகோபித்த அதிகாரத்தை ஏற்றுக் கொள்வதற்கு இறைவன் நமக்கு ஒரு சந்தர்ப்பம் தந்தார். (33:72)

ஆனால் நாம் ஒரு கடவுளாக சாத்தானின் திறமைகளைச் செயல்முறையில் காண வேண்டும் என்று விரும்பி முடிவெடுத்தோம். இத்தகைய ஒரு பயங்கரமான சோதனைக்குள்ளாக்குவதற்காக இறைவன் அவர்களைப் படைத்தார் என்ற உண்மையை மனிதர்களில் பலர் எதிர்த்து ஆட்சேபிக்கின்றனர்.

மிகவும் தெளிவாக, இத்தகைய மனிதர்கள் இரண்டு விஷயங்களை அறியாதவர்களாக இருக்கின்றனர்.

1. அவர்கள் ஒரு மாபெரும் குற்றத்தைச் செய்திருக்கிறார்கள். (பேலானகூட்டத்தாரின் தர்க்கத்தின் போது, இறைவனின் ஏகோபித்த அதிகாரத்தை உறுதியோடு ஏற்றுக் கொள்ளாமல் ஒரு கடவுள் என்ற நிலையில் சாத்தானின் ஆட்சியைப் காணவிரும்பினோம்.)

2. அவர்களுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு, அதிலிருந்து விலகி, தங்களை மீட்டுக் கொள்ள அவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் இந்தச் சோதனைக்கு உட்படு வதைத் தேர்ந்து எடுத்தார்கள்.

நம்வாழ்வு, நம்மைச் சூழ்ந்து இருக்கும் ஒவ்வொன்றுடனும் ஒரு வீடியோ டேப் போன்ற ஒன்றில் முன்னரே பதியப்பட்டு உள்ளது என்பதை வசனம் 57:22ல் நாம் அறிந்து கொள்கிறோம். நாம் ஒவ்வொருவரும் எந்த முடிவை எடுக்க இருக்கிறோம் என்பதை இறைவன் முழுமையாக அறிவார். நம்மில் யார் சொர்க்கம் செல்ல இருக்கிறார், யார் நரகம் செல்ல இருக்கிறார் என்பதை இறைவன் அறிந்திருக்கின்றார். நாம் இவ்வுலகில் பிறப்பதற்கு முன்பே நல்ல ஆன்மா எது என்றும் தீய ஆன்மா எது என்றும் இறைவன் அறிந்து இருக்கின்றார்.

இறைவனின் பூரண ஞானத்தைப் பொறுத்த வரை, "சொர்க்கம்" அல்லது "நரகம்" என்று கூறும் ஒரு முத்திரை நம்முடைய ஒவ்வொருவர் நெற்றியிலும் ஒட்டப்பட்டிருப் பதைப் போல் நாம் கற்பனை செய்து கொள்ள முடியும். இருப்பினும், நம்மைப் பொறுத்த அளவில் இறைவனின் ஏகோபித்த அதிகாரத்தின் பக்கம் அல்லது சாத்தானின் பல தெய்வக் கண்ணோட்டங்களின் பக்கம் சாய்ந்து கொள்வதற்கு முழுமை யான சுதந்திரம் உள்ளவர்களாக இருக்கிறோம். எனவே, விதி என்பது இறைவனைப் பொறுத்த நிகழ்வேயன்றி, நம்மைப் பொறுத்த விஷயம் அல்ல.


இவ்வாறு புரிந்து கொள்வது இறைவன் அவர் நாடியவரை வழி நடத்துகிறார். மேலும் அவர் நாடியவரை வழிதவறச் செய்கிறார் என்று கூறும் ஏராளமான வசனங்களை விளக்குகிறது அவருடைய ஞானத்தின் அடிப்படையில் நமக்குத் தகுதியான சூழ்நிலைகளில் இறைவன் நமது ஆன்மாக்களை நியமிக்கிறார் இறைவன் வானவர்களிடம் நீங்கள் அறியாததை நான் அறிவேன் (2:30) என்று கூறியது, நம்மில் சிலர் மீட்சிக்கான ஒரு வாய்ப்புக் கொடுக்கப்படுவதற்கு தகுதியானவர்கள் என்பதைக் குறிக்கிறது.

வழிகாட்டப்படத் தகுதியானவர்களுக்கு இறைவனின் வழிகாட்டல் பற்றிய ஒரு உதாரணம் 21:51ல் காணப்படுகிறது: "நாம் இப்றாஹீ முக்கு, அவருக்கான வழிகாட்டுதலை வழங்கினோம், ஏனெனில் அவரைப் பற்றி நாம் முழுமையாக அறிந்திருந்தோம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் இப்றாஹீம் வழிகாட்டலுக்குத் தகுதியான ஒரு நல்ல ஆன்மா என்பதை இறைவன் அறிந்திருந்தார். எனவே இறைவன் அவருக்கு அவருடைய வழிகாட்டலையும் அறிவையும் வழங்கினார்.

மற்றொரு நல்ல உதாரணம் 12:24ல் கூறப்படுகிறது.

"தன் இரட்சகரிடமிருந்து ஒரு அடையாளத்தை அவர் கண்டிராவிட்டால்" (12:24), யூசுஃப் எகிப்தியக் கனவானின் மனைவியின் வலையில் வீழ்ந்து விபசாரம் செய்திருப்பார்.

இறைவன் 12:24ல் கற்றுக் கொடுக்கிறார். அவர் தீமையையும், பாவத்தையும் யூசுஃபை விட்டு விலக்கி விட்டார், "ஏனெனில் அவர் நமக்கு அர்ப்பணித்த அடியார்களில் ஒருவராவார்" யூ சுஃப் தன் காமத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டாரா? அல்லது பாவத்திலிருந்து இறைவனின் பாதுகாவல் அவரைக் கற்புள்ளவராக ஆக்கியதா? விதி என்பது இத்தகையதே. ●○●



# குர்ஆனுக்கு மாறான
# பலதார மணம்
## கண்டிக்கத்தக்கது

**அல்முபீன் கேள்விக்கு - பதில்கள்**

**அனாதைகளிடம் நீங்கள் நேர்மையாக நடக்க முடியாது என்று அஞ்சினால் பெண்களை இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நான்கு நான்காகவோ திருமணம் செய்து கொள்ளுங்கள் (4:3)**

**கேள்வி :** அனாதைகளிடம் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கும், பெண்களை திருமணம் செய்வதற்கும் என்ன சம்பந்தம்?

இன்று முஸ்லிம்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் சமுதாயத்தினரிடையே உள்ள சீர்கேடுகளில் ஒன்று நிபந்தனையற்ற பலதாரமணம். நான்கு மனைவிகளைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்பதற்கு ஆதாரமாக அவர்கள் கூறும் வசனம் இது. ஆயினும் இவ்வசனத்தில் இறைவன் பலதார மணத்தையும் அனாதைகள் நலனையும் இணைத்துக் கூறுவதை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. அவர்களுடைய அறிஞர்கள் இத்தொடர்பை நினைவுபடுத்தாது மட்டுமல்ல துண்டிக்கவும் செய்து விட்டார்கள்.

இன்று இஸ்லாமியர்களின் ஷரி அத் சட்டத்தில் எவ்வளவு கிழவனாக இருந்தாலும் சரி, அவன் தயங்காமல் பலதார மணம் செய்து கொள்ளலாம். 'நான்கு மனைவிகள் வரை' என்பதே அதில் உள்ள ஒரே நிபந்தனையாகும். இந்த இறை நிபந்தனையைடக் கூட தலாக் (விவாகரத்து) கூறுவதை மிகவும் சுலபமாக்கி வைத்து இருப்பதாலும் உங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களுடனும் நீங்கள் உறவு கொள்ளலாம் என்ற வசனத்தை மிகவும் கீழ்த்தரமாக துஷ்பிரயோகம் செய்து வைத்திருப்பதாலும் செல்லாததாக ஆக்கிவிட்டனர்.

-ஏற்கனவே நான்கு மனைவிகள் இருந்து ஐந்தாவது ஒரு பெண் வேண்டுமென்றால் நான்கில் ஒன்றைத் தலாக்' சொல்லிவிட்டால்

ப்ரச்னை தீர்ந்து விட்டது! - உங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் என்ற அரபுச் சொற்றொடரின் (Arabic Phrase) அர்த்தம் உங்களுக்கு உரிமையானோர் என்பதே -

இவர்கள் அதனை அக்காலத்தில் அடிமைகளை வைத்திருப்பது சட்ட பூர்வமானதாக இருந்ததால் - அடிமைப் பெண்கள் என்று மட்டும் குறுகிய அர்த்தம் செய்து வைத்துக் கொண்டுள்ளனர். ஐ.நா சபையில் தீர்மானம் போடப்பட்டு, உலகம் முழுவதும் அடிமைச் சந்தை சட்ட விரோதமாகி விட்டாலும், இன்னமும் அடிமைத் தனத்தை இஸ்லாம் அங்கீகரிப்பது போன்ற ஒரு தவறான தோற்றத்தையும் உண்டாக்கி வைத்துள்ளனர்.

இன்றும் கூட அரபுகள் தங்கள் பணியாட்களை அடிமைகள் போன்று நடத்துவது, அங்கு சென்று வந்தவர்கள் சாட்சியாக இருக்கும் ஒரு விஷயம். மற்ற மொழி பேசும் முஸ்லிம்களிடத்தில் - 'அடிமைப் பெண்கள்' என்றால் யார் என்ற விஷயத்தில் நீண்ட காலமாகத் தர்க்க ம் நடந்து வருகிறது. அவரவர் இஷ்டப்படி இதற்கு அர்த்தம் செய்து வைத்துள்ளனர்.

**அனாதைகளுக்கு நலம் பயக்கும் என்று நீங்கள் கருதினால், அவர்களுடைய தாய்மார்களை நீங்கள் மணந்து கொள்ளலாம். நீங்கள் இரண்டு, மூன்று அல்லது நான்கு திருமணங்கள் செய்து கொள்ளலாம். நீங்கள் நியாயமின்றி நடந்து கொளவர்கள் என அஞ்சினால், அப்போது நீங்கள் ஒன்றைக் கொண்டு அல்லது உங்களிடம் முன்னரே உள்ளதைக் கொண்டு திருப்தியடைய வேண்டும். கூடுதலாக, இதன் மூலம் நீங்கள் பொருளாதாரக் கஷ்டங்களைத் தவிர்த்து கொள்ளவும் வாய்ப்புக்கள் அதிகமாகும். (4:3)**

இவ்வாறு இறைவனின் சட்டங்களை இலகுவாக எடுத்துக் கொண்டு அவற்றைத் துஷ்பிரயோகம் செய்து வைத்திருப்பதால், இன்று இஸ்லாமியர்கள் திடீரென தலாக் (விவாகரத்து) கூறுவதும், பலதார மணம் செய்து கொள்வதும் மிகச் சாதாரணமான ஒரு நிகழ்வாகி விட்டது. குடு குடு கிழவர்கள் கன்னிப்பெண்களை பலதார மணம் செய்து கொள்வதும் பின்னர் விவாகரத்துச் செய்து விடுவதும் பணக்கார அரபு நாடுகளில் மிகமிகச் சாதாரணம்.

அரபு ஷேக்குகள் இந்தியா, பாகிஸ்தான் போன்ற ஏழை நாடுகளுக்கு வந்து அங்குள்ள இளம் பெண்களை பலதார மணம் என்ற பெயரில் அனுபவிப்பதும் பின்னர் தலாக் என்ற பெயரில் விலகி விடுவதும் நாம் செய்தித்தாள்களில் அவ்வப்போது காணும் செய்தி.

இந்தியா போன்ற ஏழை நாடுகளில் பெரும்பாலோருக்கு ஒரு மனைவியை வைத்துப் பிழைப்பை ஓட்டுவதே மிகவும் சிரமம் என்ற நிலை இருப்பதால், இங்குள்ள முஸ்லிம்கள் பலதார மணத்தை விட்டு விலகி இருக்கிறார்கள். ஆயினும் காசுள்ள சீமான்கள் கூசாமல் பலதார மணம் புரிவது நாம் நன்கு அறிந்த ஒன்றே.

தங்களுக்கென தனித்த ஹதீஸ் புத்தகங்கள் வைத்திருக்கும் ஷியாக்கள் என்ற இஸ்லாமியப் பிரிவினர் முத்ஆ ' என்ற பெயரில் காசு கொடுத்து விபச்சாரம் செய்வதைச் சட்டபூர்வமாக ஆக்கி வைத்து இருக்கின்றனர். பெண்ணுக்கு மஹர்' (மஹர் - சீதனப்பணம்- என்ற பெயரில் விபசாரக் கூலி) கொடுப்பார்களாம், 'நிகாஹ்' (திருமணம்) செய்து கொள்வார்களாம், காரியம் முடிந்தவுடன், ஒரு சில மணி நேரமோ அல்லது ஒரு சில நாட்களோ அனுபவித்து விட்டு தலாக் (விவாகரத்து?) செய்து விடுவார்களாம். எல்லாமே சட்டபூர்வமாக' நடக்கின்றது. இது காசு கொடுத்துச் செய்யப்படும் விபசாரமன்றி வேறு என்ன?

ஹதீஸ்களின் அடிப்படையில் இவ்வசனத்திற்கு செய்யப்பட்டு இருக்கும் அனைத்து மொழி பெயர்ப்புக்களும் அடைப்புக் குறிகளில் மனிதக் கருத்துக்கள் புகுத்தப்பட்டுச் சிதைக்கப் பட்டதாகவே உள்ளன. வாசகர்கள் அனைத்து மொழிபெயர்ப்புக்களிலும் உள்ள

அடைப்பு குறிகளை நீக்கிவிட்டுப் படித்தால், அனாதைகள் நலனையும் பலதார மணத்தையும் இறைவன் சேர்த்து வைத்திருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மேலும் தமிழில் இவ்வசனத்திற்கு செய்யப்பட்டிருக்கும் அனைத்து மொழி பெயர்ப்புக்களிலும் இரண்டாகவோ, மூன்றாகவோ, அல்லது நான் காகவோ திருமணம் புரிந்து கொள்ளுங்கள் என்று இருப்பதை இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, அல்லது நான்கு நான்காகவோ திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று மொழிபெயர்த்து குழப்பத்தை மேலும் அதிகப்படுத்தி உள்ளன.

இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கின் பெருக்குத் தொகைகளிலும் (Multiples) திருமணம் செய்து கொள்ளலாமோ அல்லது ஒவ்வொருவரும் பலதாரமணம் புரிந்துதான் ஆக வேண்டுமோ? என்று எண்ண வைக்கும் ஒரு மொழிபெயர்ப்பு.

இவ்வாறாக இவர்கள் சிதைத்து வைத்திருக்கும் இவ்வசனத்திற்குரிய மெய்ப்பிக்கும் தூதரின் சரியான ஆங்கில மொழிபெயர்ப்பையும் அதன் தமிழாக்கத்தையும் நாம் காண்போம்.

'அனாதைகளுக்கு நலம் பயக்கும் என்று நீங்கள் கருதினால், அவர்களுடைய தாய்மார்களை நீங்கள் மணந்து கொள்ளலாம். நீங்கள் இரண்டு, மூன்று அல்லது நான்கு திருமணங்கள் செய்து கொள்ளலாம். நீங்கள் நியாயமின்றி நடந்து கொள்வீர்கள் என அஞ்சினால், அப்போது நீங்கள் ஒன்றைக் கொண்டு அல்லது உங்களிடம் முன்னரே உள்ளதைக் கொண்டு திருப்தியடைய வேண்டும். கூடுதலாக, இதன் மூலம் நீங்கள் பொருளாதாரக் கஷ்டங்களைத் தவிர்த்து கொள்ளவும் வாய்ப்புக்கள் அதிகமாகும். (4:3)

உள்ளங்கையில் பெரு நெல்லிக்கனியை மறைக்க வீண் முயற்சி செய்து விட்டுப் பின்னர் நெல்லிக்கனியைக் காணவில்லயே, ஏன்? என்று கேட்பது போல் உள்ளது இவர்களுடைய கேள்வி. அனாதைகள் நலனுக்கும் பலதார மணத்திற்கும் இறைவன் ஏற்படுத்தி உள்ள தெளிவான தொடர்பை மறைக்க முயற்சி செய்து விட்டு, இரண்டிற்கும் என்ன சம்பந்தம்? என்ற கேள்வியை கேட்பது சத்தியம்

வெளிப்பட்டு விடுமோ என்ற இவர்களுடைய அச்சத்தையே வெளிப்படுத்துகிறது. மேலும் என் அப்பன் குதிருக்குள் இல்லை என்பது போலவும் உள்ளது.

அனாதைகளுக்கும் பலதார மணம் புரிவதற்கும் என்ன சம்பந்தம் என்று அவர்களுடைய மொழி பெயர்ப்புக்களில் (அவை சிதைக்கப் பட்டிருப்பதால்) தெளிவாக விளங்கா விட்டாலும், மெய்ப்பிக்கும் தூதரின் மொழிபெயர்ப்பில் மிகவும் தெளிவாக விளங்கவே செய்கிறது. பல தார மணம் குறித்து இறைவனின் எச்சரிக்கைகளைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**இப்போது நாம், மெய்ப்பிக்கும் தூதர், வழிகாட்டும் உதவியாளர் (வலிய்யம் முர்ஷதா), பலதார மணம் குறித்து குர்ஆனிலிருந்து நமக்குக் கற்றுக் கொடுப்பதைச் சிந்திப்போம். இவை ரஷாத் கலீஃபாவின் குர்ஆன் மொழி பெயர்ப்பின் (Appendix 30) பின் இணைப்பிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.**

## பலதார மணம்

1400 வருடங்களுக்கு முன்னர் குர் ஆன் வெளிப்படுத்தப்படும் வரை, பலதார மணம் என்பது ஒரு வாழும் வழிமுறையாகவே இருந்து வந்தது. பூமி இளமையானதாகவும், குறைவான மக்கள் தொகையை உடையதாகவும் இருந்தபோது, உலகின் மக்கள் தொகையை அதிகரிக்கவும், இறைவனின் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான மனிதர்களை உள்ளே கொண்டு வரவும் பலதார மணம் ஒரு வழியாக இருந்தது. குர்ஆன் வெளிப்படுத்தப் பட்ட சமயம் உலகம் போதுமான மக்கள் தொகை கொண்டதாகி விட்டதால், குர் ஆன் பலதார மணத்திற்கு எதிராக முதல் வரையறைகளை விதிக்கிறது.

பலதார மணம் குர்ஆனில் அனுமதி அளிக்கப்படுகிறது, ஆனால் கடுமையாகக் கண்காணிக்கப்படும் சூழ்நிலைகளில் மட்டும் தான். இந்த இறை அனுமதியின் எந்தவிதமான துஷ்பிரயோகமும் கடுமையான தண்டனையை வரவழைக்கும். எனவே. பலதார மணம் இறைவனால் அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலும், ஒரு குறிப்பிட்ட பலதார மணம் அனுமதிக்கப் பட்டது என்று கூறுவதற்கு முன் நமது சூழ்நிலைகளை நன்கு கவனமாக ஆராய வேண்டியது அவசியமாகிறது.

இங்கே நமக்கு ஒரு மிகச் சிறப்பான உதாரணம் முஹம்மத் நபி கதீஜா என்ற ஒரே மனைவியுடனே, அப்பெண்மணி இறக்கும் வாழ்ந்திருந்தார். அவருடைய பிள்ளைகளில் ஒருவரைத் தவிர மற்ற அனைவரையும் கதீஜா மூலமே அவர் பெற்றார். எனவே கதீஜா அவருடைய பிள்ளைகளும் 25 வருடங்கள் அவர் வாழ்ந்திருந்த காலம் வரை, நபியின் முழு கவனத்தையும் அனுபவித்தனர். அவருடைய அனைத்து செயல் பாடுகளுக்கும், 25 வயது முதல் 50 வயது வரை அவருக்கு ஒரு மனைவி மட்டுமே இருந்தார். அவருடைய வாழ்வின் பிந்திய பதிமூன்று ஆண்டுகளில், பல குழந்தைகளை விட்டு விட்டுச் சென்ற அவருடைய நண்பர்களின் வயதான விதவைகளை அவர் மணந்தார்.

அக்குழந்தைகளுக்குத் தந்தையின் இடத்தில் ஒருவரும், ஒரு முழுமையான இல்லமும் தேவைப்பட்டது. நபி அதனை அவர்களுக்கு வழங்கினார். பலதார மணத்திற்கு ஆதரவாக குர்ஆன் கூறும் குறிப்பிட்ட ஒரே ஒரு சூழ்நிலை, அனாதைகளுக்குத் தந்தையின் இடத்தில் ஒருவரை வழங்குவது மட்டுமே. (4:3) அனாதைகளின் தாய்மார்களான விதவைகளை மணந்து கொண்டது அல்லாமல், நபியின் வாழ்வில் மூன்று அரசியல் காரணமான திருமணங்கள் இருந்தன. அவருடைய நெருங்கிய நண்பர்களான அபூபக்கரும், உமரும், தங்களின் மகள்களான ஆய்ஷா, மற்றும் ஹப்ஸாவை நபி மணந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினர். அதன் மூலம் அவர்களுக்கிடையில் பாரம்பர்யக் குடும்ப உறவை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினர். அதில் மூன்றாவது திருமணம் மரியா என்ற எகிப்தியப் பெண்மணியுடன்; அவர் எகிப்தின் அரசரால் அரசியல் நட்பின் அடையாளமாக அவருக்கு அளிக்கப்பட்டார்.

இம்மிகச் சிறப்பான உதாரணம் ஒரு மகிழ்ச்சியான முழுமையான குடும்பத்தை உருவாக்க வேண்டு மென்றால், ஒரு மனிதன் தன் முழுக்கவனத்தையும், தன்னுடைய மனைவியிடத்திலும், குழந்தைகளிடத்திலும் காட்ட வேண்டுமென்று கூறுகிறது.

பலதார மணத்திற்கெதிரான வரையறைகளைக் குர்ஆன் உறுதியான வார்த்தைகளில்

அழுத்தமாகக் கூறுகிறது: "பல மனை விகளை நீங்கள் நீதமான முறையில் நடத்த முடியாது என்று நீங்கள் அஞ்சினால், நீங்கள் ஒன்றைக் கொண்டு திருப்தி அடைந்து கொள்ள வேண்டும். (4:3) நீங்கள் எவ்வளவுதான் கடுமையாக முயன்றாலும், பலதார உறவு முறையில் நீங்கள் நீதமாக நடந்து கொள்ள முடியாது. (4:129)

பலதார மணத்திற்கெதிராகக் குர்ஆனின் வரையறைகள், இறைவனின் சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடிய சாத்தியத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

எனவே, இறைவனின் சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படாது என்று நமக்கு உறுதியாகத் தெரிந்தாலன்றி, நாம் நம்முடைய காமத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, பலதார மணத்திலிருந்து விலகி இருப்பதே சாலச் சிறந்தது. சூழ்நிலைகள் பலதார மணத்திற்குக் கட்டளையிடவில்லையென்றால், நாம் நமது முழுக் கவனத்தையும் ஒரு மனைவியிடமும், அத்தாயின் குழந்தைகளிடமும் கொடுப்பதே சாலச் சிறந்தது.

குறிப்பாக, பலதார மணம் தடை செய்யப்பட்ட நாடுகளில், குழந்தைகளின் மன நலன் மற்றும் சமுதாய நலன் கருதி ஏறக்குறைய ஒரே சீராக ஒருதார மணம் வலியுறுத்தப் படுகிறது. பலதார மணம் செய்வது குறித்து ஆழ்ந்து சிந்திக்கும் போது மூன்று அடிப்படைத் தத்துவங்கள் உன்னிப்பாகக் கவனிக்கப் படவேண்டும் :

**1. பலதார மணம் வலியையும் துன்பத்தையும் எளிதாக்குவதாக இருக்க வேண்டுமே அன்றி யாருடைய வலிக்கும் துன்பத்திற்கும் காரணமாக அமையக் கூடாது.**

**2. உங்களுக்கு ஒரு இளம் குடும்பம் இருக்குமானால் பலதார மணம் புரிவது கிட்டத் தட்ட உறுதியான முறையில் துஷ்பிரயோகமே.**

**3. ஒரு இளம் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்காகப் பலதார மணம் புரிவது இறைவனின் சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்வது ஆகும். (4:19)**

●○●

குர்ஆன் ஆய்வு மைய வெளியீடுகள்

முஸ்லிம்களுக்கு

# 19

# கேள்விகள்

இன்றைய முஸ்லிம்களின் தவறான பாரம்பரிய நடைமுறைகளை சுட்டிக்காட்டி சரியான இஸ்லாத்தின் (அடிபணிதல்) பக்கம் அனைத்து மக்களையும் புதிய சகாப்தத்தை நோக்கி அழைக்கிறது

## அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது, குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், புதிய நினைவூட்டல் புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.
www.kadavulmattum.org

அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய
இறைவனின் திருப்பெயரால்

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர்-இறை
ஒரே செய்தி

Book - Post

To

*If undelivered Please return to*

புதிய நினைவூட்டல்

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662